விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 12 வெள்ளிக்கிழமை (29.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 314

29 OCT 2010

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு முன் உள்ள வீதியில் பாரிய குழி...

## இலங்கைக்கு ஆயுதங்களை நோர்வே அரசு வழங்கியதா?

### சந்தேகிக்கிறது நோர்வேயியன் அமைப்பு

(ஒஸ்லோ)

நோர்வே, இறுதி யுத்தத்தின்போது இலங்கைக்கு ஆயுதங்களை இரகசியமாக விற்பனை செய்துள்ளது என்று சந்தேகிக்கப்படுகிறது. நோர்வேயை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மனிதாபிமான அமைப்புகளில் ஒன்றான நோர்வேயியன் சேர்ச் எயிட் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே, இலங்கைக்கு நோர்வே இரகசியமான முறையில் ஆயுதங்களை விநியோகித்து உள்ளது என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

முதலாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமை உள்ளிட்ட தனக்கெதிரான தீர்ப்புகள் அனைத்துக்கும் தடையுத்தரவு கோரி சரத்பொன்சேகா தொடுத்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

சரத் பொன்சேகாவின் மனுமீதான விசாரணை இரண்டு நீதியரசர்கள் முன்னிலையில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் சரத்பொன்சேகாவுக்கு அநீதியேதும் இழைக்கப்பட்டி (15ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சை அமுல்படுத்த ஆலோசனைக்குழு நியமனம்

### அமைச்சர் பீரிஸின் பிரேரணைக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் பிரேரணைக்கு ஏற்ப கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்த ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு அதன் இடைக்கால அறிக்கையை கடந்த மாதம் 13ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளித்தது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை செயல்படுத்துவதற்காக ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை முடிபு செய்துள்ளது.

இதேவேளை ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் ஏற்கனவே அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி அதிபாதுகாப்பு வலயங்கள் குறைக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. உரிமையாளர்கள் இல்லாத காணிகள் சமூக அபிவிருத்தி பணிகளுக்கு ஒதுக்கப்படுகின்றன.

பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்த புலி உறுப்பினர்கள் 11 ஆயிரத்து 696 பேரில் 5 ஆயிரத்து 120 பேர் (15ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பம்

(கொழும்பு)

தூதுக்குடிக்கும் கொழும்பிற்குமிடையில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கப்பல் சேவையின் மூலம் பிரயாணிகள் 100 கிலோ கிராம் வரையான பொருட்களை கொண்டு செல்லமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வருட ஆரம்பத்தில் இச்சேவை ஆரம்பிக்கப்படும் என துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்தது.

அரசாங்கம் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் சேவையை எப்போது ஆரம்பிப்பது என்பதை தனியார்துறையினரே தீர்மானிக்க வேண்டும் என அமைச்சு தெரிவித்தது.

இந்த கப்பல் சேவையின் மூலம் இரு துறைமுகத்திற்கும் இடையிலான பிரயாணிகள் பயனடைவார்கள். இதன் மூலம் சுற்றுலாதுறையும் அபிவிருத்தியடையும் என நம்புவதாக வர்த்தக கப்பல்துறை பணிப்பாளர் நாயகம் சாந்த வீரகோன் தெரிவித்தார்.

அத்து (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த சீனாவுக்கு பயணம்


(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ இந்த வாரம் சீனா செல்லவுள்ளதாக வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் நேற்று தெரிவித்துள்ளன.

இந்த பயணம் தொடர்பான தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட்ட போதும் அது ஊடகங்களுக்கு தெரிய வந்ததை தொடர்ந்து வெளிவிவகார அமைச்சு தற்போது அதனை உறுதிபடுத்தி (16ஆம் பக்கம் பார்க்க)

## போரினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் சொல்ஹெய்ம் மன்னிப்பு கோரவேண்டும்

### சட்டத்தரணி கோமின் தயாசிறி சாட்சியம்



(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளராக நோர்வேயை இலங்கை தெரிவு செய்தமை பாரிய தவறாகும். நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் போரினால் துன்பத்திற்குள்ளான அப்பாவி மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என பிரபல சட்டத்தரணி கோமின் தயாசிறி கூறியுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

போர் நிறுத்த (15ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் காங்கிரஸாகிறது

(கொழும்பு)

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பெயர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என மாற்றப்படவுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல இன மக்களையும் உள்வாங்கும் நோக்கிலேயே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என பெயர் மாற்றப்படவுள்ளதாக அவர் (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகளை தடுக்க அவுஸ். நிரந்தர நடவடிக்கை

(மெல்போர்ன்)

இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தமது நாட்டுக்கு அகதிகளாக வருபவர்களை கட்டுப்படுத்துவதற்கு அவுஸ்திரேலியா நிரந்தர நடவடிக்கையை மேற்கொண்டுவருகிறது.

இதனடிப்படையில் புதிய வரையறைகளை உருவாக்குவது தொடர்பில் புதிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் கனடாவுடனும் அவுஸ்திரேலியா பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக கனடாவுக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஜஸ்டின் பிரவுன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டில் இலங்கை உள்ளிட்ட நாடுகளின் 105 அகதிப் படகுகள் அவுஸ்திரேலியா நோக்கி வந்துள்ளன. அவற்றில் சுமார் 4 ஆயிரத்து 600 சட்டவிரோத குடியேறிகள் அவுஸ்திரேலியா (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபையின் அலுவலகங்கள் யாழில்!

### இடங்களை தெரிவு செய்ய விசேடகுழு

(திருகோணமலை)

வடக்கு மாகாண சபையின் அலுவலகங்களை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்வதற்கு ஆளுநரின் செயலாளர் தலைமையில் விஷேட குழு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளது.

இக்குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரின் செயலகம், பிரதம செயலாளரின் செயலகம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் ஆகியவற்றை அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்யவுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாண சபையின் ஆளுநர் செயலகம், பிரதம செயலாளர் செயலகம், அமைச்சுகளின் அலுவலகம், (16ஆம் பக்கம் பார்க்க)





கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி அதிபர் க.இ.இராஜசேகரம் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் கல்லூரியின் ஆலயத்திலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்வுகள் இடம்பெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

படங்கள் சி.கஜீபன்

# இவ்வருடத்துக்கான சிறந்த அணி தெரிவில் யாழ்.பல்கலைக்கழக அணி முன்னிலையில்!

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.நகரில் 2010ம் ஆண்டிற்கான சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வில் கடந்த 23 ஆம் திகதி வரை நடைபெற்ற 75 போட்டிகளின்படி யாழ்.பல்கலைக்கழக அணி 44 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்தி லுள்ளது. ஜொலிஸ்ரார் கழக அணி 37 புள்ளிகளை பெற்று 2ம் இடத்திலும், யாழ். சென்றல் கழக அணி 28 புள்ளிகளை பெற்று 3ம் இடத்திலும், கே.சீ.சீ.சீ. கழக அணி 16 புள்ளிகளை பெற்று 4ம் இடத்திலும்உள்ளன. சிறி காமாட்சி கழக அணி 15 புள்ளி, யாழ்.ஜொனியன்ஸ் கழக அணி 11 புள்ளி ஆகியன 5, 6 ஆம் இடங்களிலும், கிறாஸ்கொப்பர்ஸ், அரியாலை சென்றல் கழக அணிகள் தலா 8 புள்ளிகளை பெற்று 7ம் இடத்திலும், ஈகிள்ஸ் கழக அணி 7 புள்ளிகளை பெற்று 8ம் இடத்திலும் உள்ளன.

மானிப்பாய் பரீஸ், ஸ்ரான்லி, ஸ்கந்தா ஸ்ரார் கழக அணிகள் தலா 6 புள்ளிகளை பெற்று 9ம் இடத்திலும், ஓல்ட்கோல்ஸ், யூனியன்ஸ் கழக அணிகள் தலா 5 புள்ளிகளை பெற்று 10ம் இடத்திலும் உள்ளன. (ச-5)

# 'மூலதனச் சந்தை' செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் வணிகத் துறை ஆசிரியர்களுக்கான மூலதனச் சந்தை தொடர்பான செயலமர்வு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இன்று காலை 8.30 தொடக்கம் 4.30மணிவரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை இச்செயலமர்வானது கொ ழும்பு பிணைகள்பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் நடத்தப்படவுள்ள தால் அனைத்து வணிகத்துறை ஆசிரியர்க ளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளி நொச்சி வலயக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார். (ச-5)

# முகாமைத்துவ பட்டக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டக் கற்கை நெறிக்கான (BMS) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ESBM சான்றிதழ் கற்கை நெறியினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தெரிவுப்பரீட்சை மூலம் இக் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப் படுவார்கள் எனவும் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமெனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# மின்சாரம் நாளை தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்க கட்டமைப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்சசெழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இதே தினத்தில் இதே நேரத்தில் இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி. ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ் பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும்மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாகமுடிவுற்றால் குறிப்பிடப்பட்டநேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம்வழங்கப்படலாம்என யாழ்.பிரதேசமின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ச)

# வருங்கால சந்ததியை வழிநடத்த முதியோரின்பங்களிப்பு அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் உரை



(யாழ்ப்பாணம்)

முதியோரின் அனுபவ்ங்கள் வருங்கால சந்ததியை வழிநடத்தவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தினால் 2010 சர்வதேச முதியோர் மற்றும் மாற்று வலுவுடையோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.

மேற்படி நிகழ்விற்கு உதவிப் பிரதேச செயலகர் பிறேமினி தலைமை தாங்கினார். விருந்தினர்களும், வயோதிபர்களும் மாற்று வலுவுடையோர்களும் மங்கலவிளக்கு ஏற்றிய நிலையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சர்வதேச முதியோர் தினம் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினத்தினை நாம் அனுஷ்டிக்கும் போது தற்போதைய அமைதியான சூழலை ஏற்படுத்தித் தந்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நன்றி கூறுகிறேன். எந்த நேரமும் என்னவும் நடக்கலாம் என்ற நிலைமையினை மாற்றி ஜனநாயக சூழலை ஜனாதிபதி ஏற்படுத்தித் தந்துள்ளார். இந்த நிலைமையினை பாதுகாக்க வேண்டும். அதில் முதியோர் பங்களிப்பு முக்கியமானதாகும்.

முதியோருக்கு அனுபவம் உண்டு. அதனைக் கண்டறிந்து வருங்கால சந்ததிக்கு விழிப்பூட்டும் வகையில் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். இளம் சந்ததியினை முதியோரின் அனுபவங்கள் வழிநடத்தவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் முதியோர்களும் மாற்று வலுவுடையோரும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக நிகழ்ச்சியில் "சிந்து நதியின் மிசை" நிலவினிலே என்ற பாடலை இனிமையாகப் பாடிய மாற்றுவலுவுடைய வளலாயை சேர்ந்த சர்வானந்தம் என்பவருக்கு தனது தனிப்பட்ட உதவியாக நிதியுதவியினையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிவைத்தார். (ச)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கைத் தேசிய கராத்தே சம்மேளனத்தால் 17.10.2010 அன்று யாழ்ப்பாணம் லேலாஸ் மண்டபத்தில் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தேச் சுற்றுப்போட்டியில் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த

**முரளி திவாகர்**

காட்டாப் போட்டியில் 1-ம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், சண்டைப் போட்டியில் 3-ம் இடத்தையும் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளார். இவரை மேலும் பல போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

(சி-1504) வல்வெட்டித்துறை. வல்லை விளையாட்டுக் கழகம்



**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

**VTL MANAGMENT**
Daanston House
Colombo -03
(சி/1384) T.P. 072 9994777



செல்லா சினிமா

பசங்களுக்கு ஜாலியான படம்

காட்சி நேரம்
10.30 ,2.30 ,6.30



# இன்று ஒரு தகவல்

## நிறைவு

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று சொல்வதுண்டு.

ஆனால் பொன் செய்யும் மருந்தைக் கொடுத்தால் கூட அதை போதும் என்று சொல்லமாட்டான் நம்ம ஆள்.

அப்படிச் சொல்வதற்கு மனம் வராது.

ஒரு ஊரில் ஒரு மரம் இருந்ததாம். அந்த மரத்தில் பேய் இருப்பதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அந்த ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருடைய வேலைக்காரர்களில் ஒருவன் அந்த மரத்துக்கருகில் போய்க்கொண்டிருந்தான்.

அப்பொழுது திடீரென ஒருகுரல் கேட்டது.

"உனக்கு ஏழு ஜாடி தங்க நாணயம் வேண்டுமா?" என்று கேட்டது.

"யார் இப்படிக் கேட்கிறது?" என்று நாலாபுறமும் பார்த்தான். யாரையும் காணவில்லை.

சரி, யாராக இருந்தால் என்ன? கேட்கிறதை கேட்டு விடுவோமே என்று நினைத்தான்.

"ஆமாம். வேண்டும்" என்றான்.

"அப்படியானால் நேராக உனது வீட்டுக்குப் போ. அங்கே போய்ப்பார். ஏழு ஜாடியில் தங்க நாணயம் இருக்கும்" என்றது அந்தக் குரல்.

அதன்பின் சும்மா இருப்பானா? நேராக வீட்டுக்குப் போய் பார்த்தான். நிஜமாகவே அங்கே ஏழு ஜாடி இருந்தது. முதல் ஆறு ஜாடியிலும் தங்க நாணயம் முழுவதும் நிரம்பியிருந்தது. ஏழாவது ஜாடியில் அரைவாசிதான் இருந்தது.

உடனே இவன் என்ன நினைக்க வேண்டும்? கிடைத்தவரைக்கும் போதும் என்று நினைத்துக் கொண்டு போக வேண்டியது தானே? மனம் வரவில்லை.

இருக்கிற தங்கக் காசை எடுத்து ஒவ்வொன்றாக செலவு செய்தாலே ஏழுதலைமுறைக்குப் போதும் ஆனால் இவன் அப்படி நினைக்கவில்லை. ஏழாவது ஜாடியில் அரைவாசிதானே இருக்கிறது. அதை எப்படி முழுமையாக நிரப்புவது என்று யோசித்தான்.

அதுவே அவனுக்கு ஒரு பெரிய கவலையாகப் போய்விட்டது.

ஒரு வேலை செய்தான். வீட்டில் மனைவியிடம் இருக்கும் நகை நட்டையெல்லாம் எடுத்துக் கொண்டு வா என்றான்.

அவற்றையெல்லாம் கொண்டு போய்க் கொடுத்து தங்கச் காசாக மாற்றினான்.

அந்தக் காசையெல்லாம் அந்த ஏழாவது ஜாடியில் கொட்டினான். அப்பவும் ஜாடி நிரம்பவில்லை. வீட்டிலிருக்கும் பொருட்களையெல்லாம் விற்றான் காசாக மாற்றி ஜாடியில் போட்டான். அப்படியும் அது நிரம்பவில்லை.

அடுத்த கட்டமாக, அரை வயிற்றுக்கு சாப்பிட்டான். மனைவி, பிள்ளைகளையும் அப்படியே சாப்பிடச் சொன்னான்.

அதனால் மிச்சப்படும் பணத்தையெல்லாம் தங்க நாணயமாக மாற்றி ஜாடியில் போட்டுப் பார்த்தான். அப்பொழுதும் ஜாடி நிரம்பவில்லை.

அடுத்ததாக நேராக ராஜாவிடம் போனான். பிரபு, நீங்கள் கொடுக்கும் சம்பளம் போதவில்லை. அதனை இரட்டிப்பாக்கினால் வசதியாக இருக்கும்" என்றான்.

"சரி, அப்படியே ஆகட்டும்" என்றார் ராஜா. அந்தச் சம்பளத்தையும் காசாக்கி ஜாடியில் போட்டான் அதுவும் நிரம்பவில்லை.

கடைசியாக அவன் பிச்சையெடுக்க ஆரம்பித்தான். பிச்சையெடுத்துச் சாப்பிட்டான். மற்றதையெல்லாம் ஜாடியில் போட்டான். பிச்சையெடுக்கும் பணத்தையும் போட்டுப் பார்த்தான். முடியவில்லை. ஜாடியை நிரப்ப முடியவில்லையே என்ற தவிப்பில் அவனது முகம் மிகவும் வாடிப்போய்விட்டது.

ஒருநாள் ராஜா அவனைப் பார்த்தார்.

"என்னப்பா இது? பழைய சம்பளத்திலேயே நீ மிகவும் சந்தோஷமாக இருந்தாய். இப்பொழுது அதைப் போல் 2 மடங்கு சம்பளம் வாங்குகிறாய். சந்தோஷத்தைக் காணவில்லை. ரொம்ப சங்கடப்படுவது போன்று தெரிகிறதே! ஒருவேளை உனது வீட்டில் ஏழு ஜாடி தங்க நாணயம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆமாம். இருக்கிறது. அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று கேட்டான்.

"அந்த மரத்தில் இருக்கிற பூதம் என்னையும் ஏழு ஜாடி தங்க நாணயம் வேண்டுமா? என்று கேட்டது.

நான் அப்பொழுதே வேண்டாமென்று சொல்லி விட்டேன். அதனால் தப்பித்தேன். ஏனெனில் மனிதனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு பணம் கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிருப்தி தான் வளர்ந்து கொண்டே போகும்" என்றார் ராஜா. இது இராமகிருஷ்ணர் சொன்ன கதை.

இந்தக் கதையையே நாம் இன்னும் கொஞ்சம் கற்பனை செய்து பார்க்கலாம். அப்பொழுது தான் இன்று ஒரு தகவல் முடிவதுமாதிரி இருக்கும்.

அதாவது ராஜா அப்படி சொன்னதைக் கேட்டதும் அந்த ஆள் நேராக திரும்பி அந்தப் பேயிடம் போனான.

"என்னிடம் கொடுத்த ஏழு ஜாடியையும் நீயே திருப்பி எடுத்துக் கொள். ஏனெனில் ஏழாவது ஜாடியை நிரப்புவதற்குள் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல இருக்கிறது" என்றான்.

அதற்குப் பேய் "எனக்கு அது வேண்டாம்" என்றது.

"ஏன் ?" என்று கேட்டான் இவன். அதற்கு அது சொன்னது:

"நான் ஏற்கனவே உன்னை மாதிரி இருந்தவன் தான். ஏழாவது ஜாடியை நிரப்புவதற்கு பண்ணிய முயற்சியில் தான் எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. அதன் பின் தான் நான் பேயாக மாறி இப்படி மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறேன்" என்றது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சிறுவர் காப்பக திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

'Gods Own Children Foundation' நிறுவனத்தினால் யுத்தத்தினாலும் அனர்த்தங்களினாலும் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறுவர், யுவதிகளுக்கான காப்பகம் ஒன்று எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு அச்சுவேலி வைத்தியசாலைக்கருகாமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ)

# இராசி பலன்

*29.10.2010*
*(ஐப்பசி 12, வெள்ளிக்கிழமை)*
*சஷ்டி காலை 6.20 மணிவரை*
*சப்தமி பின்னிரவு 4.34 மணிவரை*
*புனர்பூசம் முன்னிரவு 11.47 மணிவரை*
*இராகுகாலம் 10.33-12.03 மணிவரை*
*சுபநேரம் 6.03- 7.33 மணிவரை*
*இரண்டாம் ஐப்பசி வெள்ளி.*

**மேடம்** உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், ஆலய தரிசனத்தின் மூலம் மன மகிழ்ச்சியுண்டு, தொழில் வளர்ச்சி அதிகரிக்க தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர்.

**இடபம்** வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முன் வருவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் அதிகரிக்கும்.

**மிதுனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடைபெறலாம், நண்பர்களுடன் சேர்ந்து வேறு இடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், தொழிலில் கூட்டாளிகளை மாற்றும் எண்ணம் தோன்றும், வெளியூர்த் தொடர்புகள் நன்மையளிக்கும்.

**சிங்கம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளமிடும் நாள், அந்நிய தேச பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், தொலைபேசி வழியில் சந்தோசமான செய்திகளை கேட்கலாம்.

**கன்னி** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், புதிய முயற்சிகளில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், தேகநலன் உற்சாகமளிக்கும்.

**துலாம்** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரும், கொடுக்கல், வாங்கல்களில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், பயணத்தால் புதிய நண்பர்களை சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்** அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மாலை நேரம் மனஸ்தாபங்கள் விலகும், பணப்பற்றாக்குறையுண்டு.

**தனுசு** பழைய நண்பர்களை சந்திக்கும் நாள், வராத உறவினர்கள் உங்கள் வீடுதேடி வரலாம், கணவன், மனைவியிடையே அந்நியோன்னியம் ஏற்படும், கடிதம் மூலம் எதிர்பார்த்த தகவல் வந்து சேரலாம்.

**மகரம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சிக்கு தொல்லை தந்தவர்கள் விலகுவர், பழைய பிரச்சினையைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள், தேகாரோக்கியமுண்டு.

**கும்பம்** பிள்ளைகள் வழியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முதலீடுகள் பற்றி பெரியவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் கூடிய கவனமெடுப்பீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பிரயாண நன்மையுண்டு.

வளவன்

# கையால் வர்ணம் தீட்டப்பட்ட புகைப்படங்களின் காட்சி

யாழ்.பல்கலைக்கழக நுண் கலைத்துறையும் கலைவட்டமும் இணைந்து நடத்தும் முதுசம் நிகழ்ச்சித் தொடரானது எமது பிரதேசப் படைப்புக்களையும் படைப்பாளிகளையும் ஆவணப்படுத்தலையும் பரீட்சயப்படுத்தலையும் நோக்கமாகக் கொண்டு அமைப்பெற்றது.

அந்த வகையில் 13 ஆவது நிகழ்ச்சியாக "ஸபாஸ் ஸ்ரூடியோவின் கையால் வர்ணம் தீட்டப்பட்ட ஒளிப்படங்கள் 1965-2005" எனும் காட்சி ஒன்றினைக் நுண் கலைத் துறைக் கலைக்கூடத்தில் நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை காலை 11 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை நடத்துகிறது.

இது உலகப் புகைப்பட வரலாற்றிலும் யாழ்ப்பாண கலைவரலாற்றிலும் கையால் வர்ணம் தீட்டப்பட்ட புகைப்படங்களின் முக்கியத்துவத்தினையும் அழகியலையும் திரை விலக்குவதாக அமைகிறதென யாழ். நுண் கலைத்துறை கலைவட்டக் காப்பாளர் கலாநிதி.அ. நோ. கிருஷ்ணவேணி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நிர்வாக சபைத் தெரிவு

புத்தூர் வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.நிர்மலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக .சி. ரவிதாசன், உபதலைவராக க.சுந்தரவேல், செயலாளராக மா.இரத்தினசிங்கம், உபசெயலாளராக து.சுதாகர், பொருளாளராக வீ.பிரதீபன் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக எட்டு பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-134)

* * *

சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவில் இயங்கும் சாவகச்சேரி டச்சுவீதி அகிலாண்டம் சனசமூக நிலையத்தில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பி னர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக வை. இராசரத் தினம் , உபதலைவராக உ.பரமநாதன், செயலாளராக ம.விவேகானந்தன் , உப செயலாளராக ஆ.சிவபாலன், பொருளாளராக சி.சிவகரன் ஆகியோரும் 11 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# கசூரினா கடற்கரை அணுகு வீதி இன்று திறக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தித் திணைக்களமும் வடமாகாண உள்ளூராட்சி திணைக்களமும் இணைந்து இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கசூரினா கடற்கரை அணுகு வீதியைத் திறந்து வைக்கவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 80 |
| தக்காளி | 70 | 120 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 60 | 100 | 70 |
| பூசணி | 40 | 50 | 35 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 70 |
| பாகற்காய் | 130 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 90 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 120 | 140 | 90 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 130 |
| போஞ்சி | 100 | 130 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 90 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

# அற்றைத்திங்கள் கூத்துருவ நாடகம் அளவெட்டியில் நாளை மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் நடாத்தும் சிறப்பு நிலாக் காலம் என்னும் கலை நிகழ்வில்,

யாழ். திருமறைக் கலாமன்றத் தினரின் தயாரிப்பில் உருவான *அற்றைத்திங்கள்* எனும் கூத்துருவ நாடகம் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு அளவெட்டி சிவாய ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் கலாசார நிலைய திறந்த வெளி அரங்கில் மேடையேற றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் பாரி மன்னரின் வரலாற்றை கருவாகக் கொண்டு 60இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்துகொண்டு தயாரித்த இக் கூத்துருவ நாடகம் நாட்டின் பல பாகங்களிலும் மேடை யேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் இக் கலைஞர் வட்டம் நடாத்தும் நிகழ்வில் பிரான்சிலிருந்து வருகை தந்துள்ள அளவெட்டியைச் சேர்ந்த சிவபாத சுந்தரம் (குஞ்சன்) குழுவினரின் வில்லிசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளதாக அளவெட்டி மகாஜன சபையினர் அறிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# மரபணு ரீதியான சிகிச்சைகளின் மூலம் உளவியல் நோய்களை குணப்படுத்தலாம்

## ஆய்வில் தெரிவிப்பு

மரபணு ரீதியான சிகிச்சை முறைமைகளின் மூலம் உளவியல் ரீதியான நோய்களுக்கு சிகிச்சை வழங்க முடியும் என அண்மைய ஆய்வுத் தகவல் ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.

மன அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய மரபணுக்களை கண்டறிந்து அதற்கு சிகிச்சைகளை வழங்குவதன் மூலம் உளவியல் தாக்கங்களை குணப்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மரபணு ரீதியான சிகிச்சைகள் எலிகளிடம் நடத்தப்பட்ட போது சாதகமான முடிவு கிடைக்கப்பெற்றதாகக் குறிப்பிடப்படுவதோடு வழமைக்கு மாறாக செயற்பட எலியொன்றின் மூளைப் பகுதி மரபணு ஒன்றில் காணப்பட்ட கோளாறு நீக்கியதன் பின்னர் அதன் செயற்பாடுகள் வழமை நிலைமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊசிகளை ஏற்றுவதன் மூலம் உளவியல் ரீதியான பாதிப்புக் களுக்கு சிகிச்சை அளிக்க முடியும் எனவும் மன அழுத்தம் மற்றும் உளவியல் பாதிப்புக்களினால் அவதியுறும் நபர்களின் மூளைப் பகுதியில் குறித்த வகை மரபணுக்களில் குறைபாடு காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு ஏற்படும் மன உளைச்சலுக்கான பிரதான காரணிகளில் ஒன்றாக மரபணு ரீதியான பிரச்சினை கருதப்படுகின்றது எனவும் நவீன சிகிச்சைகளின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் டாக்டர் மைக்கல் கெப்லீட் தெரிவித்துள்ளார்.

தற்போதைய மருந்து மாத்திரைகளினால் சுகப்படுத்த முடியாத மன உளைச்சல்சார் உபாதைகளுக்கு புதிய சிகிச்சை முறையின் மூலம் பலன் கிட்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# யாழ்ப்பாணம், மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்-2011

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2011 ஆம் திகதி முதல் 31.12.2011 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி நீங்கலாக) - ரூ 400.00
கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி - 01.11.2010
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் - 18.11.2010, நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் - 18.11.2010, பிற்பகல் 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.11.2010 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவரது சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

**குறிப்பு:**

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) ரூபா 40.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
3. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 4.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7.00 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறிவிடக்கூடாது.
4. சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு / கோழி ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் மாத வாடகை செலுத்த வேண்டும்.
5. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜின்னா வீதி, பாசையூர் ஆகிய பகுதிகளுக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடங்களின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களையும் இணைத்தல் வேண்டும்.

### மாநகரசபை யாழ்ப்பாணம்

பொதுச்சந்தை குத்தகை

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும், 3% தேசஎ வரியும் நீங்கலாக |
|---|---|---|---|
| 1 | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,650,000.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,850,000.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,155,000.00 |
| 4 | செங்குந்தா மீன் சந்தை | 10,000.00 | 693,000.00 |
| 5 | நாவாந்துறை மீன் சந்தை | 10,000.00 | 522,500.00 |
| 6 | அரியாலை மீன் சந்தை | 1,000.00 | 110,250.00 |
| 7 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 110,000.00 |
| 8 | கச்சேரி நல்லூர் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 115,500.00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச் சாலை | 1,000.00 | 57,750.00 |
| 10 | யாழ் பொதுசன நூலக சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 13,200.00 |
| 11 | கஸ்தூரியார் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 110,000.00 |
| 12 | புங்கன் குளம் சந்தை | 2,000.00 | 11,000.00 |

(சி/1488)

05ஆம் பக்கம் பார்க்க...

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் உள்ள பாவனைக்குதவாத தளபாடங்கள் மற்றும் அலுவலகப்பொருட்கள் என்பன எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி. வ.பேரின்பநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் இப்பொருட்களை பார்வையிட விரும்புவோர் பாடசாலை நேரத்தில் பார்வையிடலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ)

# சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத்திட்டத்தின் கீழ் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புபாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இரு சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட கரவெட்டி சுடர் ஒளி மற்றும் அல்வாய் கிழக்கு பாரதி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு தலா 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக எம்.பி. தேவரையாளி கரவெட்டி பிரதேச சபைச் செயலர் கே.குலநாயகம் தெரிவித்தார்.

(ஸ்ரீ-24)

# சனசமூக நிலையங்களை புனரமைத்து தருமாறு கோரிக்கை

தனங்கிளப்பு மறவன்புலோ பகுதியில் 1999ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமாக இப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளும் பாடசாலை, பொதுக் கட்டடம், இந்து ஆலயம் என்பன முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்சமயம் இப்பகுதியில் மக்கள் குடியிருப்பு மற்றும் பாடசாலை என்பன முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளன.

இப் பகுதியில் காணப்படும் தனங்கிளப்பு ஸ்ரீமுருகன் சனசமூகநிலையம், மறவன்புலோ பகுதியில் காணப்படும் சிவகவி சனசமூக நிலையம் என்பன புனரமைக்கப் படாத நிலையில் காணப்படுகிறன.

அத்துடன் இப்பகுதியில் காணப்படும் 10 இற்கும் மேற்பட்ட பெரியஆலயங்கள் மற்றும் 25இற்கு மேற்பட்ட சிறிய ஆலயங்கள் என்பன இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளன.

எனவே இதனை புனரமைக்க தென்மராட்சி பிரதேச செயலகம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் முன் வரவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-37)

# திருமணம் செய்வதாக ஏமாற்றி மூன்று இலட்சம் ரூபாய் மோசடி

## குற்றவாளிக்கு 27 மாத கடூழிய சிறை

திருமணம் செய்து கொள்வதாக ஒரு பெண்ணுக்கு வாக்குறுதி வழங்கி விட்டு அப் பெண்ணிடம் இருந்து மூன்று இலட்சம் ரூபாயை நம்பிக்கை மோசடி செய்த நபர் ஒருவருக்கு 27 மாத கடூழிய சிறை தண்டனையும் ரூபாய் மூவாயிரம் அபராதமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நம்பிக்கை மோசடி வழக்கில் கொழும்பு கோட்டை நீதவான் மேற்படி நபரை குற்றவாளியாக கண்டு கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி இத்தீர்ப்பை வழங்கி இருந்தார். ஆயினும் குற்றவாளியாக காணப்பட்டிருந்த நபர் இத்தீர்ப்பை ஆட்சேபித்து கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்தார். இம்மேன்முறையீட்டை மேல் நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

அத்துடன் கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த தீர்ப்பை அமுல்படுத்தவும் உத்தரவிட்டது. மேற்படி நம்பிக்கை மோசடி கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி இடம் பெற்றிருக்கின்றது. (ஸ்ரீ-2)

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இறைச்சிக்கடை குத்தகை

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை.இல | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12%பெறுமதி சேர் வரியும், 3% தேசவரியும் நீங்கலாக |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 104,060.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல 02 | 5,000.00 | 34,650.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 03 | 5,000.00 | 92,400.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 04 | 5,000.00 | 126,500.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 05 | 5,000.00 | 57,750.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 06 | 5,000.00 | 57,750.00 |
| 7 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 07 | 5,000.00 | 46,200.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 08 | 5,000.00 | 46,200.00 |
| 9 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | | 103,950.00 |
| 10 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல 02 | | 154,000.00 |
| 11 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 98,450.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல 02 | | 97,900.00 |
| 13 | புங்கன் குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 57,750.00 |
| 14 | புங்கன் குளம் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 127,050.00 |
| 15 | ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | | 29,700.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 98,450.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 02 | 5,000.00 | 121,000.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 03 | 5,000.00 | 75,075.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 04 | 5,000.00 | 77,000.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 05 | 5,000.00 | 61,050.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 06 | 5,000.00 | 77,000.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 07 | 5,000.00 | 77,000.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 08 | 5,000.00 | 77,000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 09 | 5,000.00 | 77,000.00 |
| 25 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 10 | 5,000.00 | 11,000.00 |
| 26 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல 11 | 5,000.00 | 11,000.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல 12 | | 11,000.00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 214,500.00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 23,100.00 |
| 30 | நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 99,000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 150,150.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 02 | | 150,150.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 03 | | 150,150.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 04 | | 150,150.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 05 | | 150,150.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 06 | | 150,150.00 |
| 37 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 07 | | 150,150.00 |
| 38 | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | | 27,500.00 |

# இலங்கையை ஆசியாவின் கல்விக்கான மத்திய நிலையமாக ஜனாதிபதி கட்டியெழுப்புவார்

## அமைச்சர் எஸ்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு போதும் இலவசக் கல்வி மீது கை வைக்கமாட்டார். மாறாக அதற்கு புத்துயிர் அளித்து ஆசியாவின் கல்விக்கான மத்திய நிலையமாக இலங்கையை கட்டியெழுப்புவார் என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இதனை குழப்புவதற்கு சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் அனைத்து சவால்களையும் வெற்றி கொள்வோம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கம்பளை விக்கிரமபாகு வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் உரையாற்றும் போது,

இலவசக்கல்வியின் தந்தை கன்னங்கர மத்திய மாகாண வித்தியாலயங்களில் ஆங்கில மொழி மூலமான கற்கையை அறிமுகப் படுத்தினார். இதனால் சர்வதேசத்துடன் தொடர்புகள் உருவாகின.

கறுவாத்தோட்டத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த ஆங்கிலம் கம்பளை போன்ற கிராமங்களுக்கும் பரவியது.

கடந்த 1956 இல் சிங்களத்தை அரச கரும மொழியாக்கினார். பண்டாரநாயக்க இதன் மூலம் கிராமத்தில் வாழ்ந்த அப்பாவிப் பெற்றோரின் பிள்ளைகளுக்கும் நாட்டுக்கு சேவை புரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆனால் பட்டப்படிப்பை முடித்த பின்பு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை வீதியில் கோஷங்களை எழுப்பும் குழுவினர் உருவானது. இதற்கு மூல காரணம் சர்வதேச மொழி அறிவு இல்லாமையே ஆகும்.

இந்தியாவிலும் நேரு ஹிந்தி மொழியை அரச கரும மொழியாக்கினார். அதற்கு அன்று எதிர்ப்பு தோன்றியது.

இதனை உடனே கைவிடுமாறு மகாத்மாகாந்தி நேருவிடம் கேட்டுக்கொண்டதையடுத்து அக்கொள்கை கைவிடப்பட்டு மும்மொழிக் கொள்கைஅறிமுகப் படுத்தப்பட்டது.

அனைத்துப் பிராந்திய மொழியோடு இன்னொரு மொழியையும் சுற்றிருத்தல் வேண்டுமென்றும் உயர் கல்வியின் மொழியாக ஆங்கிலத்தையும் பிரகடனப்படுத்தினார். இதனால் சர்வதேசத்ததுடன் தொடர்புகளை பேணக் கூடிய புத்திஜீவிகள் உருவானார்கள்.

இவ்வாறானதொரு நாட்டை கட்டியெழுப்பி ஒழுக்கமுள்ள பல்கலைக்கழகங்களை உருவாக்கி ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை கட்டியெழுப்ப ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் .இது வெற்றி பெறும். அதற்காக அனைத்து சவால்களையும் முறியடிக்க தயாராகவுள்ளோம் என்றார். (ஸ்ரீ-2)

## சிறுவர் தின நிகழ்வு

அத்தியடி சிறுவர் மேம்பாட்டுக்குழுவும் கலைமகள் சிறுவர் கழகமும் இணைந்து நடாத்தும் சிறுவர் தின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு கணபதி கலாசார மண்டபத்தில் கலைமகள் சிறுவர் கழகத் தலைவர் செல்வி ஜெ.ஜெகஉசாந்தினி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்,கௌரவ விருந்தினர்களாக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பிருந்தா இந்திரகுமார் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக ஜே/78 அத்தியடி கிராம சேவையாளர் திருமதி றசிகலா விஜயரட்ணம் ,யாழ். மாநகர சபை உறுப்பினர் மா.கனகரத்தினம், அத்தியடிப்பிள்ளையார் தேவஸ்தானம் சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்,சொன்ட் நிறுவன சிறுவர் செயற்றிட்ட இணைப்பாளர் செ.பிரகாஷ்,யாழ். மத்தியஸ்த சபைத் தலைவர் வி. ஸ்ரீசக்திவேல்,மாதர் சங்கத் தலைவி திருமதி செ.சச்சிதானந்ததேவி,சிறுவர் மேம்பாட்டுக்குழு ந.ஜெயராஜா மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் செல்வி சி.டெல்சி ராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

## சனிக்கிழமை வங்கிச்சேவை

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளையானது நாளை சனிக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் தனது வங்கிச் சேவையை காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை நடத்தவுள்ளதாக வங்கி முகாமையாளர் சி.நித்தியா னந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 15 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

15ஆம் திகதியில் பிறந்தவர்கள் நல்ல வசதியான வாழ்க்கை, சுமாரான வாழ்க்கை என இரண்டு நிலைகளிலும் இருப்பார்கள். இவர்களின் மனநிலையைப் பொறுத்தே உடல்நிலையும் செயலும் தொழிலும் அமையும். இவர்களில் பெரும்பாலோர் 1ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்களைப்போல் இருப்பதைக் காணலாம். இவர்களின் பொருளாதார நிலை சற்றுகுறைவாகவே இருக்கும். 5ஆம் எண் ஆதிக்கத்தினரைப்போல் இருப்பவர்கள் நல்ல வசதியைப் பெற்றவர்களாக இருப்பதைக் காணலாம். இவர்களின் தொழில் அதிபதி எண்கள் 6, 9; தொழில் உதவி எண் 6.

பெரும்பாலும் இவர்கள் பணப் புழக்கம் உள்ள துறைகளிலேயே இருப்பார்கள். இவர்களின் முன்னேற்றம் என்பது இவர்களின் பதவி அமைப்பைப் பொறுத்தே உண்டாகும். திட்டத்தைச் செயல்படுத்துதல், அரசு உதவிகள் மற்றும் பணப் பரிவர்த்தனை போன்ற செயல்களுக்காக திடீரென பதவி உயர்வும் இட மாற்றமும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இவர்களின் தொழில் எண், உதவி எண் இரண்டும் 6ஆக இருப்பதால் சற்று துடுக்குத்தனமான குணம் உடையவர்களாகவும் காணப்படுவர்.

தொழில் எண்களில் 9இன் ஆதிக்கம் பெற்றவர்கள் தொழிலில் நேர்த்தியான திறமையும் துணிச்சலும் மிக்கவராக இருப்பார்கள். எந்தச் சூழ்நிலையிலும் பொருளாதாரச் சரிவின்றி இருப்பார்கள். 6, 9ஆம் எண்களின் ஆதிக்கமும் 1, 5ஆம் எண்களின் ஆதிக்கமும் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்களின உயர்வுக்கும் தாழ்வுக்கும் பெண்களே காரணமாக இருப்பதால் கவனமாகச் செயல்படுவது நன்மையைத் தரும். இவர்கள் வெள்ளிக் கிழமைதோறும் குபேர வழிபாடு செய்தால் நன்மைகள் பெறலாம்.

இவர்கள் எந்த தொந்தரவுமின்றித் தொழில் செய்யும் அமைப்பைப் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்களுக்குத் தொழில் அதிபதி எண்களான 6, 9இன் ஆதிக்கமும், நட்பு எண் 6ஆக அமையப் பெற்றதாலும், பிறந்த திகதி எண்கள் 1 மற்றும் 5இன் ஆதிக்கம் அதிகமாக அமையப் பெற்றாலும் மிக உன்னதமான நிலையில் இருப்பார்கள். இவர்களுக்கு தொழில் நிலையில் சரிவு என்பது- இவர்களின் தகுதிக்குச் சற்றும் ஒவ்வாத நபர்களின் பழக்கவழக்கங்களால் தான் ஏற்படும். எனவே பழகும் போதே தெரிந்து பழகுதல் நன்மையைக் கொடுக்கும். தொழிலில் புதிய உத்திகளைக் கையாளும் திறமையும் அதிகமாகக் காணப்படும்.

தொழில் அதிபதி எண்களின் ஆதிக்கம் குறையும் நிலை ஏற்படும்போது பெண்களின் சூழ்ச்சிக்கு ஆளாக நேரிடும். வெள்ளிக் கிழமைதோறும் குபேரலட்சுமிக்கு மலர் மாலை சாற்றி நெய் தீபமேற்றி வழிபட்டு வந்தால் வீழ்ச்சியற்ற வாழ்வைப் பெற்று பெருவாழ்வு வாழலாம்.

15ஆம் திகதியில் பிறந்து தொழிலாளர்களாக இருப்பவர்கள் மிகக் குறைந்த அளவில்தான் இருப்பார்கள். பிறந்த திகதி ஆதிக்கமும் தொழில் அதிபதி எண் ஆதிக்கமும் மிகக் குறைவாக இருப்பவர்கள் மட்டுமே தொழிலாளர்களாக இருப்பார்கள். சாதாரண நிலையில் இருந்தாலும் 24 வயதிற்கு மேல் எண்ணாதிக்கம் கிடைக்கப் பெற்று படிப்படியாக முன்னேறும் தன்மை உண்டாகும். ஒரு சிலருக்கு 33 வய துக்குமேல் முன் னேற்றம் கிடைக்கப் பெறும். எந்த வகையான தொழில் செய்தாலும் வெற்றி பெற்று முன்னேற்றம் காணும் நிலை இருக்கும். இவர்களில் பலர் பணம் கிடைக்க ஆரம்பித்தவுடன் - முன்னேற்றம் ஏற்பட்டவுடன் மனம், நடை, உடை, பாவனைகள்ள மாற்றிக் கொள்ளும் தன்மை உடையவர்களாகவே இருப்பார்கள். வெள்ளிக் கிழமைதோறும் விஜயலட் சுமிக்கு ரோஜா மலர் சாற்றி நெய் தீபமேற்றி வழிபட்டு வந்தால் நன்மைகள் உண்டாகும்.

பெரும்பாலும் இவர்கள் மேன்மையான நிலையிலேயே இருப்பார்கள். எந்த நிலையிலும் தகுதியை இழக்காமல் இருக்கப் பாடுபடுபவர்களும் இவர்களே. தொழிலில் நேர்மையாக உள்ளவரை எந்தச் சிக்கலும் பிரச்சினையுமின்றி செல்லும். இவர்களுக்குப் பெண்களால் உதவிகளும் முன்னேற்றமும் கிடைப்பது போலவே வீழ்ச்சியும் அவமானமும் பொருளாதாரச் சீர்குலைவும் ஏற்படும். கவனமாகச் செயல்பட்டால் எண் ஆதிக்கமே இவர்களைக் காப்பாற்றி விடும். 27வயது முதல் வாழ்க்கையில்முன்னேற்றங்களைத் தொடர்ந்து பெறும் நிலை உண்டாகும். எண் ஆதிக்கம் குறைவாக உள்ளவர்களே தொழிலில் எதிர்நீச்சல் போடும் நிலைக்கு ஆளாவார்கள். எண் ஆதிக்கக் குறைபாடுகளைச் சீர்செய்து கொண்டு வாழ்வில் வளம் பெற வெள்ளிக் கிழமைதோறும் கலை வாணியையும் நடராஜரையும் சிவகாமியையும் வழிபட வேண்டும்.

பிறந்த திகதி 15, விதி எண் 1ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் அதிகபட்சமாக 22 வருடங்கள் யோக பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 15, விதி எண் 2ஆக உள்ளவர்களுக்கு 20 வயதுக்குமேல் 11 ஆண்டுகளும், 36 வயதுக்குமேல் 9 ஆண்டுகளும் நற்பலன் உண்டாகும். பிறந்த திகதி 15, விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு இடைவெளி விட்டு 6 ஆண்டுகள் பிறகு 3 ஆண்டுகள் இடைவெளி விட்டு 6 ஆண்டுகள் என யோகப் பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 15, விதி எண் 4ஆக உள்ளவர்களுக்கு மனதிற்கு ஏற்ப தேவை என்றால் அதிகமான, தேவை யில்லை என்று நினைத்தால் சுமாரான பலன் கள் தொடர்ந்து கிடைக்கப் பெறும். பிறந்த திகதி 15, விதி எண் 5ஆக உள்ளவர்களுக்கு 24 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 15, விதி எண் 6ஆக உள்ளவர்களுக்கு 33 ஆண்டுகள் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 15, விதி எண் 7ஆக உள்ளவர்களுக்கு முதலில் 11 வருடங்களும்; கடைசியில் 11 வருடங்களும் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 15, விதி எண் 8-ஆக உள்ளவர்களுக்கு 24 ஆண்டுகள் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 15, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் 15 ஆண்டுகள், அதிகபட்சமாக 31 ஆண்டுகள் நற்பலனைச் செய்யும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும். (தொடரும்)



வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தேவைக்காக நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் மேட்டு நிலப்பரப்பில் விவசாயம் செய்பவர்களுக்கு நிலப்பண்படுத்தலுக்காக 2ஆயிரம் ரூபா நன்கொடையும் சர்வோதய நிறுவனத்தினால் யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி.ரூபினி வரதலிங்கம்,சர்வோதய நிறுவன திட்டப்பணிப்பாளர் எஸ்.பரலோகசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும். நன்கொடை என்பவற்றை பயனாளிகளுக்கு கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் விரைவில் அமுல்படுத்தப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை சமாளிக்கும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நான்காம் கட்ட ஈழ யுத்தம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபுணர்கள் குழு மேற்கொண்டு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு உலக நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய நாடுகளின் ஆலோசனைகளின்றி யுத்தத்தின் பின்னரான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொழி, காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணல் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை களைதல், தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பில் விசேட நடவடிக்கை எடுத்தல், புலி உறுப்பினர்களை பார்வையிடுவதற்கு அவர்களின் பெற்றோருக்கு சந்தர்ப்பம் அளித்தல் போன்ற பரிந்துரைகளை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அமர்வுகளை ஆரம்பித்ததாகவும் ஆறு மாதங்களுக்குள் விசாரணைகளை பூர்த்தி செய்யப்பட்டு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நம்பகத்தன்மை குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை மனித உரிமை கண்காணிப்பகம், சர்வதேச அனர்த்த குழு போன்ற சர்வதேச நிறுவனங்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## ப.நோ.கூ.சங்கக் கிளையை திறக்குமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)


வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மாமுனைப் பகுதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்கடை திறக்கப் படாமையால் இப்பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த மக்கள் தற்போது செம்பியன் பற்று தெற்குப் பகுதியில் உள்ள கிளைக் கடைக்குச் சென்று நிவாரணப்பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் பெற்று வருகின்றனர்.

எனவே இந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாமுனை வடக்குப் பகுதியில் ஏற்கனவே பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் இயங்கி வந்த இடத்தில் கிளைக் கடையினை திறக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-43)







உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் விருந்தினர்கள் கல்லூரி மண்டபத்திற்கு அழைத்துவரப்படுவதையும் பாடசாலை பிரதி அதிபர் திருமதி ஏ.கே.ஜோசப் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கல்வி வலய கற்றல் முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் திருமதி குட்டித்தம்பி பரிசில் வழங்குவதையும் மற்றும் விழாவில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

# வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை குறித்து ஆராய்வு



வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவில் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சகல அரச திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்கள், இராணுவத் தரப்பினர் மற்றும் பொதுமக்களை உள்ளடக்கிய அபிவிருத்தி மேம்பாட்டுக் கூட்டமொன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதம் இருபதாம் திகதி இடம்பெற்ற பொதுக்கூட்டத்தின் தொடர்ச்சியாகவும் அதன் மீளாய்வுக் கூட்டமாகவும் நேற்று முன்தினம் மாலை மருதங்கேணி பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் மீளக்குடியேறும் மக்களின் அத்தியாவசிய தேவைகள் மற்றும் துறைசார் பிரச்சினைகள் தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக கடற்றொழில், விவசாயம், ஏனைய வாழ்வாதாரத் தொழில்கள், வீதி அபிவிருத்தி, போக்குவரத்துச் சேவை, வீடுகள் அமைத்தல், கிணறுகள் சுத்தம் செய்தல், கல்வி நடவடிக்கைகள், சுகாதாரம், கால்நடை வளர்ப்பு,தபால்சேவை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுத் துறை அபிவிருத்தி உட்பட ஏனையதுறைசார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டன.

வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதார தொழிலான கடற்றொழில் குறித்து ஆராயப்பட்ட சமயம் கருத்துத் தெரிவித்த பிரதேச படைகளின் கட்டளை அதிகாரியான கேணல் ஜெயதிலக்க, இப்பகுதியை புலிகளிடமிருந்து மீட்டெடுத்த போது ஒரு தொகை மீன்பிடிப் படகு களைத் தாம் கண்டெடுத்து தமது பாதுகாப்பில் வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் உரிமையாளர்களினால் இனங்காணப்பட்ட படகுகளை உடனடியாகவே உரிமையாளர்களிடம் கையளிப்பதெனவும் ஏனைய படகுகள் தொடர்பில் சங்கங்களிடம் கையளித்து உரிமையாளர்களிடம் ஒப்படைக்கலாம் என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இவ்வேளை கருத்து தெரிவித்த கடற்றொழில் பணிப்பாளர் தர்மலிங்கம், கடற்றொழிலாளர்களின் தேவைகள் படிப்படியாக நிறைவேற்றப்படுவதாக தெரிவித்த அதேவேளை கடற்றொழிலாளருக்கு உதவிகள் தேவைப்படுமிடத்து அரச சார்பற்ற நிறுவனங்ளின் தொடர்பு கொண்டு அவற்றை தாம் பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். கடற்றொழிலுக்கு மேலாக மற்றைய பிரதான வாழ்வாதார தொழிலான விவசாயம் மற்றும் வாழ்வாதாரத் தொழில்களான சீவல், சிகை அலங்காரம், சலவைத்தொழில் போன்றவற்றை ஆரம்பிப்பதற்கும் தேவையான உதவிகளை பெற்றுத் தருவதாக அமைச்சர் உறுதியளித்தார்.

இதில் விவசாய நடவடிக்கைகளில் பெரும்போகத்திற்கான விதைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைப் பிடித்து அவற்றை மீளக்குடியேறும் மக்கள் வளர்ப்பதற்கென கையளிக்கப்பட்டதுடன் இதற்கு படைத்தரப்பினரினது ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மற்றொருபுறம் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டபோது, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான இலவச போக்குவரத்தினை மேற்கொள்ள உடனடி பணிப்புரைகளை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாணவர்களுக்கு முட்டை மற்றும் மீனுடன் கூடிய சத்துணவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தினார். அத்துடன் வடமராட்சி கிழக்கில் தொண்டராசிரியர்களாகப் பணிபுரிந்தோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் முகமாக தாம் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றினை சமர்ப்பிக்க இருப்பதாக தெரிவித்ததுடன் தொண்டராசிரியர்களின் பெயர்கள் மற்றும் சேவை விபரங்களை உறுதிப்படுத்துமாறும் மேலதிக மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உரிய பணிப்புரைகளையும் வழங்கினார்.

அத்துடன் எதிர்வரும் மழைகாலத்திற்கு முன்னர் முன்னர் வீதி புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்படி வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி அபிவி ருத்தி திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதுடன் 155.7 மில்லியன் ரூபா வீதி அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் தரமான வீதிகள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு துறை தொடர்பான விடயங்களும் பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் அந்தந்தத் திணைக்கள அதிகாரிகளின் அபிப்பிராயங்கள் பெறப்பட்டு தனித்தனியாகவும் விரிவாகவும் ஆராயப்பட்ட நிலையில் அனைத்து அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளையும் துரிதப்படுத்துமாறு அமைச்சர் உரிய உயரதிகாரிகளுக்கு பணிப்புரைகளை வழங்கியமை முக்கிய விடயமாகும். (ஸ்ரீ)

## தரம் - 9 மாணவர்களுக்கான வலயமட்ட முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் - 9 மாணவர்களுக்கான வலயமட்ட முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் இதற்கான வினாத்தாள் பொதிகளை எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை வலயக் கல்வி அபிவிருத்தி பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறும் யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி. இராசலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## யாழ்.மாவட்ட சிறுவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மைய நிறுவனமானது யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இலங்கை கிரிக்கெட் சபையுடன் இணைந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர்களுக்கான Cricket for Children எனும் தலைப்பில் கிரிக்கெற் பயிற்சிமுகாம் ஒன்றினை நேற்று தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்துகின்றது.

இதில் முதற்கட்டமாக யாழ்.சமூக செயற்பாட்டு நிறுவனத்தின் சிறுவர் கழகங்களில் இருந்து ஆண்களும் பெண்களுமாக 24 சிறுவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இதில் சர்வதேச தரம் வாய்ந்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் பயிற்றுவிப்பாளர்கள் இப் பயிற்சியினை வழங்குவதோடு இப் பயிற்சி முகாமில் கிரிக்கெட் நுட்பம் மட்டுமல்லாமல் சிறுவர்களிற்கான தலைமைத்துவம் மற்றும் சிறுவர் உரிமைகளுக்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இவ்வகையானதொரு பயிற்சிமுகா மானது யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக நடாத்தப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் பயிற்சி முகாம் முடிவில் சான்றிதழ் வழங்கும் வைபவமானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெறவுள்ளதாகவும் இதில் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பிப்பார்கள் என யாழ்.சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை வங்களாவடி மண் சுமந்தான் பதி அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவப் பெருமான் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் வைரவப் பெருமானுக்கு விசேட (108) அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் நண்பகல் விசேட பூசையும் இடம்பெறும். (ஸ்ரீ)

## ஜயரத்தினம் நினைவுதினமும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மகாஜனாக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் மற்றும் சின்னப்பா சிலை திறப்பும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சற்குணானந்தம் கைலாசநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபரும், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான தலைவருமான ஆறு.திருமுருகன் கலந்துகொள்வார்.

நினைவுப் பேருரையை லண்டன் உளவள நல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி துரையப்பா இராசமுத்தையா நிகழ்த்தவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆசிரியை திருமதி கௌரி சண்முகலிங்கன் வழங்கி சிறப்பிப்பார். (ஸ்ரீ-2)




## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்தில் கடந்த 23 ஆம் திகதி ஏற்பட்ட அசௌகரிய நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சுற்றுலாப் பயணிகள் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை ஆர்வமுள்ள அனைவரிடமிருந்தும் பெற வேண்டி இருப்பதால் தங்களின் கருத்துக்களை வழங்குமாறு யாழ். நூலக பிரதம நூலகர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சித்தன்கேணி தனுவோடைப்ப...
# ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் தே...
# சிறப்பு மலர் -

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சித்தன்கேணி தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற இறை வனைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்துக்களின் வரலாற்றில் சிவவழிபாடு முக்கியமான தாகும் "அவனின்றி ஒரு அணுவும் அசையாது" எனும் தத்துவம் சிவவழிபாட்டின் உண்மைத் தன்மையினை விளக்கி நிற்கின்றது.

இவ்வாறு பழமை வாய்ந்த இவ்வழிபாட்டில் சித்தன்கேணி தனுவோடயம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம் பரேஸ்வரர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக நிகழ்வு இன்று சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல பரம்பொருளை நினைந்து எனது நல்லாசியினை தெரிவிக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குருமகா சன்னிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
யாழ்ப்பாணம்.

ஆதீன குரு முதல்வர்,
ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞான சம்பந்த பரமாச்சாரிய
சுவாமிகள்.

## துணைவேந்தரின் வேண்டுதல்



ஆலயங்களின் உயிர்ப்பிலே எங்கள் பண்பாட்டுணர்வு காக்கப்படுகின்றது; ஆத்ம வல்லமை வளம் பெறுகின்றது.

இந்தவகையில் சித்தர்களும், ஞானியரும் வாழ்ந்த எங்கள் பாரம்பரியப் புலமான சித்தங்கேணியில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற சிவசிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு இன்று பெருங்குடமுழுக்கு ஆராதனை.

சிதம்பரத்துக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பண்பாட்டுத் தொடர்பின் அருள்நீட்சியாய் அமைந்த இவ்வாலயத்தின் அருள்வீச்சானது எங்கணும் பரவி எல்லா மக்களுக்கும் நிறைவான வாழ்வினைத் தர இந்நாளில் எல்லோரும் ஒன்றிணைந்து வேண்டுதல் செய்வோம்.

"இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க"

பேராசிரியர் நா.சண்முகலிங்கன்,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை



சித்தன் கேணி தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ.சிவசிதம்பரேஸ்வர பெருமானுடைய உத்தமோத்தமம் எனப்படும் 33 ஓம குண்ட மஹா கும்பாபிஷேகம் இன்று (29.10.2010) நடைபெறுவதையிட்டு பிரதிஷ்டா பிரதம குருவாகிய நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இக்கும்பாபிஷேகத்திற்கு அருள் ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் காஞ்சி பெரியவர் சுவாமிகள், சிவ ஸ்ரீ சோமஸ்கந்த குருமணி , நல்லை ஆதீன சுவாமிகள் அவர்களுக்கும் எமது வணக்கங்கள்.

நாட்டின் பல பாகங்களில் இருந்து கலந்து சிறப்பித்து கொண்டிருக்கும் சிவாச்சாரிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கங்கள்.

ஆலயத்தை அழகுற புதுப்பித்த சிற்பாச்சாரியார்கள், கட்டடக் கலைஞர்கள், வர்ணக்கலைஞர்கள்,ஆசாரிமார்கள் அனை வருக்கும் எமது நல்லாசிகள். மேலும் கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கும் மங்கள வாத்திய கலைஞர்கள்,உபசாரம் படைத்த வேத, திருமுறை, மிருதங்க, வீணா, வேணு, நிருத்த, உடுக்கு,சல்லாரி போன்ற இசைக்கலைஞர்களுக்கும், ஒலி, ஒளி அமைப்பாளர்கள், பத்திரிகை நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், படையினர் ஆகியோருக்கும் திருப்பணி, கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கு பண, சரீர உதவிகள் புரிந்த சிவனடியார்கள் அனைவருக்கும் தொண்டு ஆற்றிய இளைஞர்கள், அலங்காரம் செய்தவர்களுக்கும் ஆலய பரிபாலன சபையினர் அனைவருக்கும் சிவகாமி சமேத சிவசிதம்பரரேஸ்வர பெருமானின் பரிபூரணமான அருள் கிடைக்க பிரார்த்தித்து எமது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுபம்.

பிரம்மஸ்ரீ ஞானபண்டித குருக்கள்
சபாரத்தின சர்மா


சிவ ஸ்ரீ சபா .வாசுதேவ
குருக்கள்.

## வாழ்த்துச் செய்தி

சித்தங்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழாவையிட்டு ஆலய பரிபாலன சபை தலைவர் என்ற ரீதியில் பெருமிதம் அடைகின்றேன். நீண்ட நாட்களாக மகா சபையிலும் பரிபாலன சபையிலும் இவ்வாலயத்தினுடைய மகா கும்பாபிஷேகத்தை நடாத்த வேண்டும் என்று எண்ணிய கருமம் இன்று கைகூடியதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாம் வல்ல சிவசிதம்பரேஸ்வரர் அருள் பாலிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தியாகராஜா ராசகுமார்,
தலைவர், ஆலய பரிபாலன சபை.

## சிறப்புற வாழ்த்துவோர்:-



## நன்றி

சித்தர்கள் வாழ்ந்த சிறப்பு மிகு... கொண்ட ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வ... பாலிக்கின்ற சித்தங்கேணி ப... கும்பாபிஷேகம் நடைபெறு... இந்நிகழ்விலே எம்முடன் ஒ... ஞா.சபாரத்தினசர்மா, ச.உமாபதிச... ஆலயத்தினுடைய பிரதம குருவா... எமது முதற்கண் நன்றிகளைக் ... பல்வேறு இடங்களிலும் இருந்து ... சிறப்பித்த சிவாசாரியார் குருமா... கொள்கின்றேன்.

மேலும் எமது இச்சிறப்பு ம... பெருமக்களையும் சிறப்பு மலரிற்... வலம்புரி நிர்வாகத்தினருக்கும் ந...

இதேவேளை இக்கும்பாபிஷே... நல்கிய சிவனடியார்களுக்கும் ந...

மேலும் இவ்வாலயத்தை... சிற்பக்கலைஞர்கள், கட்டடக் கலை... ஆகியோருக்கும் இக்கும்பாபிஷே... கலைஞர்கள், ஒலி, ஒளி ... செய்தவர்கள் மற்றும் சித்தங்கே... ஆலய அபிமானிகள் ஆகியோ... காணிக்கையாக்குகின்றேன்.

புதிய வினோ நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தர
வாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
New Vino Nagai Madam
Main Street, Chankanai
T.P:-0776002588

Mobile Plaza
Phone Shope
மொபைல் ப்ளாசா
போன் சொப்
பிரதான வீதி, சங்கானை.
Main Street, Chankanai.
T.P:-0779352902

சுந்தர்சன்
யாழ்.வீதி,
மானிப்பாய்.
T.P:-021 225 5136

TIP TOP
TRAVELS & TOURS
கொழும்பு → யாழ்ப்பாணம்
#296/A1,Galle Road,
Wellawatta,
Colombo - 6
T.P:-0112361144
0112364999
0773236354

விநாயகர் தொலைத்
தொடர்பு நிலையம்
சித்தங்கேணி
தொ.பே: 0778932805
யாழ் வின்சன்
தியட்டருக்கு அருகில்
தொ.பே: 0777351588

SKY
WWW.Skylineitc.c

# ...தி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத
# ...வஸ்தான மஹா கும்பாபிஷேக
# – 29.10.2010





## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



பசுமைமிகு வயல்களும், தோட்ட வெளிகளும் மருதத்தின் மாண்புரைக்க, சூழ்ந்திருக்கும் நீலக்கடல் நெய்தலின் நீர்மை செப்ப, புகழ் பூத்த கல்லூரிகள் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்க, நல்லதொரு நகருக்கு இலக்கணமாய் அமைந்திட்ட வட்டுக்கோட்டையின் கண் சிறப்புற இலங்கும் சித்தங்கேணி எனும் பிரதேசத்தில் மாண்புற அமைந்திட்ட ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

பக்தர்களின் பேரன்பும், பெரும்பக்தித்திறனும் ஒருங்கிணைய சமூகத்தை நல்லாற்றுப்படுத்தும் இறைநம்பிக்கைக்கு உகந்த இடங்களாக ஆலயங்கள் கருதப்பட்டதாலேயே, நம் முன்னோர்கள் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று பொருள்பட பகர்ந்தனர். இவ்வழி கோவில்களால் சிறந்து நிற்கும் சித்தங்கேணியில் அமைந்திட்ட மகிமை வாய்ந்த சிவன்கோயிலாக சித்தங்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலயம் திகழ்கின்றது. சிவனுக்குரிய விசேட தினங்களில் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளில் வாழும் மக்களும், இத் தேவஸ்தானத்தைப் பக்தியுடன் நாடிவரக் காண்கின்றோம். சைவசமய ஆகமவிதிகளுக்கு அமைவாக, அமைதியான சூழலில் அமைந்து, அடியார்க்கு வேண்டும் வரமீந்து வரும் சித்தங்கேணி ஸ்ரீசிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம் இன்று மகாகும்பாபிஷேகம் கொள்கின்றது. அனைத்துப் பெருமைகளும், சீர்மைகளும் நிறைந்திட்ட சித்தங்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வர ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்பாக அமைவுற சிவன் அவன் தாள் வணங்கி வாழ்த்துகின்றேன்.

திருமதி.இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

## வாழ்த்துச் செய்தி



"பெரியானை பெரும் பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"
அப்பர்

சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பட்ட ஈழத்தின் வடபால் சித்தர்கள் வாழ்ந்த ஊராகக் கருதப்படும் சித்தங்கேணிப்பதியில் எழுந்தருளி இவ்வுலக உயிர்களுக்கு நல்லருள் புரிந்து கொண்டிருக்கும் ஆடல் வல்லானின் திருத்தலத்தில் 29.10.2010 சுக்கிரவாரம் கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதை அறிந்து உள்ளம் மிக மகிழ்கின்றேன். கும்பாபிஷேக திருப்பணிக் குழுவினர் விழாவையொட்டி சிறப்பு மலரொன்று வெளியிடுதலும் பாராட்டுக்குரியது.

திருப்பணிக் குழுவின் முயற்சி வெற்றி பெற அருள்புரிந்த எல்லாம் வல்ல பரம்பொருளாம் இறைவனின் திருவருளை வேண்டுகின்றேன்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

ஜோய்மகிழ் மகாதேவா
மாவட்ட நீதிபதி.

## ...கள் பல

...ித்தங்கேணியினுடைய அருளாட்சியைக் ... சிவகாமி அம்பாள் சமேதராய் அருள் ...பிஷேகம் இன்று 33 ஓம குண்ட மகா ...தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ...துழைத்த ஆலய சிவாசாரியார்கள் ...ா மற்றும் பிரதிஸ்டா பிரதம குருவும் எமது ...ள வாசுதேவக் குருக்கள் அவர்களுக்கும் ...ணிக்கையாக்குகின்றேன். இதேவேளை ...கும்பாபிஷேக நிகழ்விற்கு வருகை தந்து ...க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்

...ிற்கு வாழ்த்துரை வழங்கிய அறிஞர் ... விளம்பர உதவி வழங்கியவர்களுக்கும் ...றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ...நிகழ்விற்கு பண உதவி, பொருள் உதவி ...றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ... அழகுறப் புதுப்பிக்க உதவிய ...ஞர்கள், வர்ணக் கலைஞர்கள், ஆசாரிமார் ...நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த வாத்தியக் ...மப்பாளர்கள், அலங்காரத் தொண்டு ...ி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர், ...க்கும் எனது சிரந்தாழ்ந்த நன்றிகளைக்

சதாசிவம் ஐங்கரன்,
செயலாளர்,
ஆலய பரிபாலன சபை.

மலரமைப்பு:-
K.விஜயகாந்தன்

## வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல பரம்பொருள் ஆகிய சிவனுடைய பாதார விந்தங்களை பணிந்து 29.10.2010 இன்று சித்தன்கேணி சிவ சிதம்பரேஸ்வர ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடப்பதை முன்னிட்டு இந்த ஆலயத்தினுடைய ஸ்தாபக பூர்வீக வழித்தோன்றல் என்ற வகையிலும் தேர்த்திருவிழா பரம்பரை உபயகாரர் என்ற வகையிலும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.33 ஓம குண்ட மகா அபிஷேகம் நடைபெறும் சிறப்பு மிகு நன்னாளில் எல்லாம் வல்ல சிவ சிதம்பரேஸ்வர பெருமான் அருள்பாலிக்க பிரார்த்திக்கின்றேன். இவற்றுக்கு மேலாக மிகப்பெரிய பொருட்செலவில் இம் மகா கும்பாபிஷேக ஏற்பாட்டை திறம்பட வடிவமைத்த பரிபாலன சபை உறுப்பினர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன். இதேவேளை சிறுவனாக நான் கண்ட வாசுதேவ சிவாசாரியார் நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தில் பிரதிஸ்டா பிரதம குருவாக உயர்ந்த நிலை பெற்று மேற்படி கும்பாபிஷேகத்தை நடாத்துவதையிட்டும் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.அவருடைய சேவை இச்சிவாலயத்தில் இவ்வண்ணமே தொடரவும் இம்மகா கும்பாபிஷேக சிறப்பு நிகழ்வால் இவ்வூர் மட்டுமல்லாது இவ் இலங்கைத் தீவின் துன்பங்கள் அகல எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.

வேலாயுதம் சிவஞானசோதி,
செயலாளர்,
பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்
முயற்சி அமைச்சு,
780 ,மருதானை வீதி,
கொழும்பு.

## எம்பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணத்தில் பழமையும் பெருமையும் வாய்ந்த வலி மேற்கில் சித்தன்கேணியில் அமைந்துள்ள தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர பெருமானுடைய மஹா கும்பாபிஷேகம் 29.10.2010 இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகிறோம்.

பல்வேறு சிறப்புக்கள் மிக்க இவ்வாலயத்தில் ஆரம்ப காலங்களில் திருப்பணி செய்வதற்கு மிகவும் நிதி நெருக்கடி ஏற்பட்ட நிலையில் இவ்வூரில் வாழ்ந்த சிவன் அடியார்கள் ஒன்று சேர்ந்து பிடி அரிசியை பெற்று இதன் மூலம் நிதியை பெற்று மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

ஆனால் தற்போது பரிபாலனசபையினரும் சிவன் அடியார்களும் வெளிநாடுகளில் வாழும் அன்பர்களும் ஒன்று சேர்ந்து "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற மொழிக்கிணங்க தொன்று தொட்டு திருப்பணியை வெகு சிறப்பாக நிறைவேற்றி வருகின்றனர். இன்றைய தினம் நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எம் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இளைஞர் முன்னேற்ற கழகம்
சித்தன்கேணி.





...LINE INFORMATION TECHNOLOGY CENTER
...ov. Reg No : VW/Fn/R/I/01/2008,Head Office DICA Reg No :0041/JAF/TC/10



Ponnalai Road ,Sithankerny,Jaffna,srilanka
Branch Office : Vaddukoddai Road, Vaddukoddi.
T.P:- 0215100235,0212250078,
0779527575,0771362080
...e-mail: Skyline.ltc@gmail.com,Skylineitc @ Computer 4u.com

# இந்தோனேசியாவில் அடுத்தடுத்து சோகம்; எரிமலை வெடித்து சிதறியதில் 28 பேர் பலி



(இந்தோனேசியா)

இந்தோனேசியாவில் மெரபி எரிமலை வெடித்துச் சிதறியதில் 28 பேர் உடல் கருகி பலியாகியுடன் 14 பேர் தீக்காயம் அடைந்தனர். இந்தோனேசியா ஜாவா தீவில் யோக்யகர்த்தா நகருக்கு வெளியில் அமைந்துள்ள மெரபி எரிமலை கடந்த 26 ஆம் திகதி வெடிக்க ஆரம்பித்தது. பயங்கர வெப்பம் கொண்ட புகையும் , சாம்பலும் , எரிமலைக் குழம்பும் வெளிக்கிளம்பி சுற்று வட்டாரங்களில் பரவ ஆரம்பித்தன.

கடந்த சில நாட்களுக்கு முன்பே எரிமலையை சுற்றி யுள்ள பகுதிகளில் வசித்த 11 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

அருகிலுள்ள கிராமங்கள் அனைத்திலும் சாம்பல் பரவி வெள்ளை மயமாகக் காட்சியளிக்கிறது. பல வீடுகளும் கால்நடைகளும் , மரங்களும் , எரிமலையில் இருந்து வெளியான வெப்பக் காற்றில் கருகிவிட்டன.

இதற்கிடையில் இரண்டு நாட்களுக்கு முன் சுமத்ரா தீவு அருகில் சுனாமி தாக்கிய சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது.

மேலும் 380 க்கும் மேற்பட்டோரை காணவில்லை. மோசமான வானிலை காரணமாக மீட்புப் பணிகள் தாமதமடைந்துள்ளன.

(ஸ்ரீ-2)

# சீனாவில் உலக அழகிப் போட்டி

சீனாவில் நாளை சனிக்கிழமையன்று உலக அழகி போட்டி நடைபெறவுள்ளது. இதற்காக 120 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் சீனாவில் குவிந்துள்ளனர். சீனாவில் சான்யா டவுனில் இறுதிப் போட்டி நடைபெறுகிறது.

நோர்வே அழகி மேரியான் பிர்கேடலுக்குப் பட்டம் வெல்ல வாய்ப்பு அதிகமாக இருப்பதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இது சீனாவில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் சீனாவில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் லியு சியாபோவுக்கு நோர்வே அரசு நோபல் பரிசு அறிவித்திருந்தது. இது சீனா ஆட்சியாளர்கள் மத்தியில் எரிச்சலை ஏற்படுத்தியுள்ள நிலையில் நோர்வே அழகி பட்டம் வெல்வது மேலும் புகைச்சலை அதிகரிக்கும் என சலசலக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


# ராஸ் அல் கைமா நாட்டின் மன்னரான குவாசிமி மரணம்

(டுபாய்)

ஐக்கிய அரபு குடியரசுகளில் ஒன்றான ராஸ் அல் கைமாவின் மன்னர் ஷேக் சாகிர் அல் குவாசிமி வயது (90) நேற்று முன்தினம் மரணம் அடைந்தார். அவருக்குப் பின் அவரது மகன் இளவரசர் ஷேக் சவுத் மன்னராவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரசு குடியரிசில் தன்னாட்சி பெற்ற எட்டு நாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று ராஸ் அல் கைமா. இதன் மன்னராக ஷேக் சாகிர் அல் குவாசிமி இருந்தார். இவர் 60 ஆண்டுகளுக்கு மேலாக மன்னர் பொறுப்பில் இருந்தார். உடல் நலக் குறைவால் பல் மாதங்களாக மருத்துவமனையில் இருந்த அவர் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

குவாசிமிக்குப் பின் அவரது மகன் பட்டத்து இளவரசர் ஷேக் சவுத் மன்னர் பொறுப்பை ஏற்க உள்ளார். (ஸ்ரீ-2)



மலேஷியாவுக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை அந்நாட்டு பிரதமர் நஜிப் ரஸாக் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் வரவேற்றார்.

# அருந்ததிராயின் கருத்துக்கு முழுமையான ஆதரவு

## திருமாவளவன் அறிவிப்பு



(சென்னை)

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி அல் என்று அருந்ததிராய் பேசியதை முழுமையாக ஆதரிப்பதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

காஷ்மீர் குறித்த பிரபல எழுத்தாளர் அருந்ததிராயின் கருத்துக்கு எதிராக மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் கடும் கண்டனத்துக்குரியவை. பெரும்பான்மையான காஷ்மீர் மக்கள் விடுதலையை விரும்புகிறார்கள் என்பதே உண்மை. மத்திய உள்துறை அமைச்சர் தலைமையிலான அனைத்துக் கட்சிக்குழுவில் ஒருவராக நான் காஷ்மீர் சென்றிருந்தேன்.

இந்திய ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலைபெறவேண்டும் என்று எங்களிடம் அந்த மாநில மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அருந்ததிராய் பேசியதாக கூறப்படும் செய்திகளில் எந்தச் தவறும் தேசவிரோதமும் இருப்பதாகச் தெரியவில்லை. காஷ்மீர் மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதனைத்தான் அவர் பேசியுள்ளார் என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# திருமண வீடொன்றின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 65 பேர் பலி

## ஆப்கானிஸ்தானில் கோரச் சம்பவம்


(காபூல்)

ஆப்கானிஸ்தானில் திருமண வீட்டில் மேற்கூரை இடிந்து விழுந்ததில் பெண்கள் , குழந்தைகள் உட்பட 65 பேர் பலியாகினர். ஆப்கானில் மிகவும் பழைமையான முறையில் சுடவைக்காத மண்ணால் உருவாக்கப்பட்ட கல்லைக் கொண்டு ஏராளமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வீடுகளின் உறுதித் தன்மைக்கு ஈடுகொடுக்க மரத்தினால் ஆன தூண்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்நிலையில் பக்லன் மாகாணம் ஜெல்கா மாவட்டத்தில் உள்ள ஒரு வீட்டில் திருமணம் நடைபெறவிருந்தது. இதற்காக ஏராளமானோர் வந்திருந்தனர். அப்போது வீட்டின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது. இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 65 பேர் பரிதாபமாக இறந்தனர். மேலும் 40 பேர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து பக்லன் மாகாண ஆளுநர் முன்ஷி அபல் மஜித் கூறுகையில்,

மூன்றடுக்கு கட்டடமான இதன் ஒரு பகுதி நேற்று முன்தினம் இடிந்து விழுந்தது. இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது என்றார். (ஸ்ரீ-2)



இங்கிலாந்து சென்றுள்ள கட்டார் நாட்டின் ஜனாதிபதிக்கு, இங்கிலாந்து ராணி மற்றும் இளவரசர்,அரசு மரியாதை செலுத்தும் வகையில் குதிரை அணிவகுப்பு நடந்தது.

# பிரான்சுக்கு பின்லேடன் விடுத்துள்ள எச்சரிக்கையால் பெரும் பரபரப்பு

முஸ்லிம்களை பிரான்ஸ் நடத்தி வரும் விதமே அந்நாட்டைச் சேர்ந்தோர் 5 பேரை செப்டெம்பரில் அல்கொய்தாவினர் கடத்துவதற்கு காரணமாய் அமைந்தது என ஒசாமா பின்லேடனின் குரல் பதிவுடன் கூடிய தகவலொன்றை அல் ஜஜீரா தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

எங்கள் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டும் மக்கனைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் உங்கள் நாடு மட்டும் அமைதியாக ஏன் இருக்க வேண்டும் என்ற தொனியுடன் பின்லேடன் பேசுவது போன்ற வாசகங்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

நீங்கள் கொன்றால் நாங்களும் கொல்வோம். எங்கள் மக்கள் கடத்தப்பட்டால் உங்கள் நாட்டினரும் கடத்தப்படுவார்கள்.

எங்கள் இஸ்லாமிய நாடுகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படின் அதையே நாங்களும் திருப்பிக் கொடுப்போம். அப்போது தான் அனைத்தும் சரிநிகர் சமனாகும் என அந்த ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரான்ஸ் இஸ்லாமிய பெண்களின் உடையான பர்தாவை கொஞ்சமும் யோசிக்காமல் தடை செய்துள்ளதையும் சுட்டிக்காட்டி கடும் கண்டனமும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையே உள்ள மலைப்பகுதிகளில் பின்லேடன் ஒளிந்துள்ளதாக நம்பப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலங்கைக் கடற்படைத் தளபதி இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரால் திசர சமரசிங்க இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

இந்திய பாதுகாப்புச் அமைச்சர் ஏ.கே. அந்தோனி மற்றும் இந்திய உயர் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோருடன் கடற்படைத் தளபதி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்தியக் கடற்படைத் தளபதி நிர்மல் வர்மாவின் அழைப்பினை ஏற்று இலங்கைக் கடற்படைத் தளபதி திஸர சமரசிங்க எட்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.

கடற்படைத்தளபதியுடன் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசமும் இந்திய உயர் அதிகாரிகளை சந்தித்துள்ளார்.

இரு நாட்டு கடற்படையினருக்கும் ஏனைய பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் முக்கிய படியாக இந்த விஜயத்தை கருத முடியும் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரியின் பொன்விழா நிகழ்வுகளிலும் கடற்படைத் தளபதி திசர சமர சிங்க பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படை தளபதி திசர சமர சிங்க இந்திய பாதுகாப்பு கல்லூரி கடற்படை பயிற்சி முகாம்களில் முயற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலங்கையிலுள்ள வெளிநாட்டு பிரஜைகள் குறித்து புலனாய்வுப் பிரிவு விசாரணை

(கொழும்பு)

இலங்கையில் கடமையாற்றி வரும் வெளிநாட்டுப் பிரஜைகள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவன பணியாளர்களாகவும் சுற்றுலாப் பயணிகளாகவும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சில வெளிநாட்டுப் பிரஜைகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இவ்வாறானவர்களில் பலர் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றிவருவதாகவும் அவர்கள் அர சாங்கத்திற்கு வரி எதனையும் செலுத்துவதில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. இதன் காரணமாக பெருமளவிலான அரசாங்கப் பணம் இழக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண் ஆசிரியர்களும் இலங்கை நிறுவனங்களில் கடமையாற்றி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களாகவும் சுற்றுலாப் பயணிகளாகவும் நாட்டுக்குள் பிரவேசித்து தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களை நாடு கடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாணத்திற்குள் சீன புலனாய்வுப் பிரிவினர் ஊடுருவல்!

## த.ம.வி.பு.கட்சி குற்றச்சாட்டு

சீனாப் புலனாய்வுப் பிரிவினர் கிழக்கு மாகாணத்திற்குள் ஊடுருவியுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் தைலேஸ்வரராஜா இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீன அதிகாரிகளில் புலனாய்வுப் பிரிவினரும் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

சீன புலனாய்வுப் பிரிவினரின் ஊடுருவல் தொடர்பில் மக்கள் தமக்கு தெரியப்படுத்தியதாக அவர் சுட் டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை சீன புலனாய்வுப்பிரிவினர் கிழக்கில் ஊடுருவியுள்ளதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என இலங்கை இராணுவத்தினர் தெரிவித்துள் ளனர்.

தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிலர் இவ்வாறான பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் உபயமெதவல கூறினார்.

கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீன அதிகாரிகள் மிகவும் கிரமமான முறையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவ தாகவும் சீன அதிகாரிகளில் நேர்த்தியான செயற்பாட்டை பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் தெரி வித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

இலங்கையில் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்களினால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20தொடக்கம் 30 வருடங்களில் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் நாட்டின் மொத்த சனத் தொகையில் 10 வீதமானவர்கள் நீரிழிவு நோயினாலும் 25 சதவீதமானவர்கள் இரத்த அழுத்த நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் புதிய புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புகை பிடித்தல், மது பானம் அருந்துதல், மன அழுத்தம், மோசமான உணவுப் பழக்க வழக் கம் போன்ற காரணிகளி னால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதா கவும் அத்துடன் போர்ச் சூழலினாலும் அதிகளவு மக்கள் இந்த நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடக்கக்கது. (ஸ்ரீ-2)

# 2010.10 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 0969 - பைசண்டைன் படைகள் சிரியாவின் அண்டியோக் நகரைக் கைப்பற்றின.

❖ 1422 - ஏழாம் சார்ள்ஸ் பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.

❖ 1618 - ஆங்கிலேய எழுத்தாளரும் நாடுகாண் பயணியுமான சேர் வால்ட்டர் ரேலி இங்கிலாந்தின் முதலாம் ஜேம்சிற்கு எதிராக சூழ்ச்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்குள்ளாக்கப்பட் டார்.

❖ 1665 - போர்த்துக்கல் படையினர் கொங்கோ பேரரசைத் தோற்கடித்து அதன் மன்னன் முதலாம் அண்டோனியாவைக் கொன் றனர்.

❖ 1859 - ஸ்பெயின் மொரோக்கோ மீது போரை அறிவித்தது.

❖ 1863 - சுவிட்சர்லாந்தில் கூடிய 16 நாடுகளின் பிரதிநிதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கத் தீர்மானித்தனர்.

❖ 1866 - அன்றைய பிரித்தானிய இந்திய அரசுக் கும், திருவாங்கூர் மன்னருக்கும் இடையே முல்லைப் பெரியாறு ஒப்பந் தம் கைச்சாத்திடப்பட்டது.

❖ 1901 - ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்லியம் மக்கின்லியைக் கொலை செய்த குற்றத்திற்காக லியோன் சொல்கோஸ் என்பவனுக்கு மரணதண் டனை நிறைவேற்றப்பட்டது.

❖ 1913 - எல் சல்வடோரில் பெரும் வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கானோர் இறந்த னர்.

❖ 1922 - முசோலினி இத்தாலியின் பிரதம மந்திரியானார்.

❖ 1923 - ஓட்டோமான் பேரரசு முறிவடைந்ததைத் தொடர்ந்து துருக்கி குடியரசானது.

❖ 1929 - "கறுப்பு செவ்வாய்" என அழைக்கப் பட்ட இந்நாளில் நியூயோர்க் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்தது. பெரும் பொருளியல் வீழ்ச்சி ஆரம்பமானது.

❖ 1948 - "சாஃப்சாஃப்" என்ற பாலஸ்தீனக் கிராமமொன்றில் புகுந்த இஸ்ரேலியர்கள் 70 பாலஸ்தீனர்களைச் சுட்டுக்கொன்ற னர்.

❖ 1950 - அமரர் கல்கியின் *பொன்னியின் செல்வன்* தொடர் வரலாற்றுப் புதினம் முதற் தடவையாக கல்கி இதழில் வெளிவர ஆரம்பித்தது.

❖ 1956 - இஸ்ரேலியப் படைகள் சினாய் தீபகற்பத்தைக் கைப்பற்றி எகிப்தியப் படைகளை சுயஸ் கால்வாய் நோக்கி விரட் டினர்.

❖ 1961 - ஐக்கிய அரபுக் குடியரசில் இருந்து சிரியா வெளியேறியது.

❖ 1964 - தங்கனிக்கா மற்றும் சன்சிபார் இரண்டும் இணைந்து தன்சானியாக் குடியரசு ஆகியது.

❖ 1964 - 565 கரட் (113 கிராம்) "ஸ்டார் ஒஃப் இந்தியா" உட்படப் பல பெறுமதி மிக்க வைரங்கள் நியூயோர்க் நகரில் உள்ள அமெரிக்க அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டன.

❖ 1967 - மொண்ட்ரியால் நகரில் 50 மில்லியன் மக்கள் கண்டு களித்த எக்ஸ்போ 67 உலகக் கண்காட்சி முடிவடைந்தது.

❖ 1983 - துருக்கியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்து 300 பேர் கொல்லபப்பட்டனர்.

❖ 1991 - நாசாவின் கலிலியோவிண்கலம் 951 காஸ்ராவுக்கு அண்மையாகச் சென்று சிறுகோள் ஒன்றுக்கு அண்மையாக சென்ற முதலாவது விண்கலம் ஆனது.

❖ 1998 - டிஸ்கவரி விண்ணோடம் STS-95 என்ற விண்கப்பலுடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.

❖ 1998 - 39 பேருடன் சென்ற துருக்கிய விமானம் ஒன்று குர்தியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது.

❖ 1998 - சூறாவளி மிட்ச் ஹொண்ட்டுராசைத் தாக்கியது.

❖ 1999 - ஒரிஸாவில் இடம்பெற்ற பெரும் சூறா வளியினால் 10ஆயிரம் பேர் வரை இறந்தனர். 2.5 மில்லியன் மக்கள் வீடுகளை இழந்தனர்.

❖ 2002 - வியட்நாமின் ஹோ ஷி மின் நகரில் பல்பொருள் அங்காடி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில்60 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

❖ 2005 - டில்லியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 60 பேர் வரை கொல்லப் பட்டனர்.

### பிறப்புகள்

❖ 1971 - மத்யூ ஹெய்டன், அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்

❖ 1981 - ரீமாசென், இந்திய திரைப்பட நடிகை

❖ 1985 - விஜேந்தர் குமார், இந்தியக் குத்துச் சண்டை மெய்வல்லுனர்

### இறப்புகள்

❖ 2001 - ஆர்.சுந்தரலிங்கம், இலங்கை வானொலி மற்றும் பிபிசி தமிழோசை அறிவிப்பாளர்.

❖ 2007 - லா.சா.ராமாமிர்தம், தமிழ் எழுத்தாளர் (பி. 1916)

**1969 - உலகின் முதலாவது ஒரு கணனியில் இருந்து வேறொரு கணனிக்கான தொடுப்பு ARPANET மூலம் இணைக்கப்பட்டது.**





வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் கணித ஆசிரியர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ்.கல்வி வலய கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வி.மகேந்திரன் செயலமர்வை நடத்துவதையும் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# ஜனாதிபதியின் பதிலுக்காக காத்திருக்கும் த.தே.கூட்டமைப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் பதிலுக்காக காத்திருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளதாகவும், இந்த விஜயத்திற்கு முன்னர் சந்திப்பொன்றை நடாத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பேச்சுவார்த்தை தொடர்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் கடந்த 29 ஆம் திகதி அதற்கான பதில் கடிதத்தை அனுப்பி வைத்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் இடம்பெயர் மக்கள் விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக மாவை சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த வாரத்தில் சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளதாக வெளிவிவார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# தகவல் தொழில்நுட்பத் துறையை முன்னேற்ற 5 வருட வேலைத்திட்டம்

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்பத்துறையை முன்னேற்றுவதற்கு 5 வருட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் திஸ்ஸ விதாரண இதனைத் தெரிவித்துள்ளார்.

தகவல் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக குறைந்த அளவிலான அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை காரணமாகவே இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி உரிய முறையில் முன்னெடுத்து செல்லப்பட வேண்டுமானால் தகவல் தொழில்நுட்ப அறிவு அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பாதுகாப்பு அமைச்சின் பெயரால் ரூ. 7.5 மில். மோசடியில் ஈடுபட்டவருக்கு பிணை நிராகரிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சினுடைய உத்தியோகபூர்வ கடித முகப்பு, இலட்சினை ஆகியவற்றை போலியாக தயாரித்து அதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவின் மனைவி ஆகியோரின் கையொப்பங்களை போலியாக இட்டு 7.5 மில்லியன் ரூபாவை கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரிடம் இருந்து மோசடி செய்ய முயன்றார் என்கிற வழக்கில் சந்தேக நபரான ஓய்வுபெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு பிணை வழங்க கொழும் புக்கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் மறுத்துவிட்டது.

பதில் நீதிவான் ஆர்.எம்.ஜயவர்த்தன இச் சந்தேக நபரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை அனுமதி கோரும் மனுவை நிராகரித்தார். அத்துடன் சந்தேக நபரை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# மலையகத்தில் தனியான பல்கலைக்கழகம் அமைப்பது நடைமுறைச் சாத்தியமற்றது

## யோகராஜன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

மலையகத் தமிழ் மாணவர்களுக்கு தனியான பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பது நடைமுறைச் சாத்தியமற்றதென ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

மலையப் பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து தற்போது 100 மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவதாகவும் இவ்வாறான ஓர் பின்னணியில் தனியான பல்கலைக்கழகம் அமைப்பதில் பயனில்லை எனவும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை சேர்க்கும் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதிகளவு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்ட அடிப்படையை விடவும் விசேட திறமை அடிப்படையில் தற்போது மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதாகவும், மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டால் அதிகளவு மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிட்டும் எனத் தெரிவித்துள்ளார்.

ஆரம்ப மட்டத்திலான ஓர் பல்கலைக் கழகத்தில் கல்வி பயில்வதற்கு எவரும் விரும்பமாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமாக உருவாவதற்கு நீண்ட காலம் தேவைப்படும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கான உலக அமைப்பினால் நடத்தப்பட்ட மாநாட்டில் கலந்துகொண்டபோது பிரபா கணேசன் மலையகத்தில் தனியான ஓர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளர்கள் நியமனம்


(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமனக் கடிதங்களை வழங்கினார்.

இதனடிப்படையில் அலி ஸாஹிர் மௌலானா மற்றும் அருண் தம்பிமுத்து ஆகிய இருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டக்களப்பு தேர்தல் தொகுதியின் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பாளர்களாகவும் எம்.தயாகாந்த பெரேரா கொழும்பு கிழக்கு தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் வழங்கியுள்ளார்.

மேலும் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானாவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். (ஸ்ரீ-2)



உரும்பிராய் வடக்கு கணேசா முன்பள்ளியின் ஆசிரியர் தின விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் நிலையத் தலைவர் ச.ஏகாம்பரநாதன் உரையாற்றுவதையும் அருகில் ஆசிரியர்கள், நிலையப் பொருளாளர் ஆகியோர் இருப்பதையும் ஆசிரியர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீதுதான் பெரும்பாலான இராச்சியங்கள் அழிந்தன. - யங்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கையில் சீன ஆதிக்கத்தை கட்டுப்படுத்த தமிழகத்தில் கடற்படைத் தளம் நிறுவும் இந்தியா

இலங்கைக்கூடாக சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தவும் இலங்கைக் கடற் படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்கு தல் நடத்துவதை தடுக்கவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலை தடுக்கவும் கடற்படைத் தளம் ஒன்றை இந்தியா ,தமிழகத்தில் அமை க்கவுள்ளது.

இரு தமிழக தூத்துக்குடி கரையோரத்தில் அமைக்கப் படவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இந்திய கடற்படை அதிகாரிகளை சந்தித்த அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தவும் ஏனைய நாடுகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் ஒரிசா பரதீப் கரையோரத்தில் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கவும் இந்தியா திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (ஸ்ரீ-2)

## அற விழுமியம் இல்லாத போது கற்றவர்க்கு சிறப்புக் கிடையாது

யுத்தத்தின் வெற்றியிலும் தமிழினத்தை அடக்குவதிலும் அரசு தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வரும் இவ்வேளையில் நாட்டின் ஒட்டு மொத்த ஒழுக்கவியலும் படு பாதாளத்தில் விழுந்து போயுள்ளதை நாட்டில் இடம்பெறும் சம்பவங் கள் நிரூபித்துள்ளன.

தென்பகுதிப் பல்கலைக்கழகங்களில் மாண வர்களிடையே நடைபெறும் மோதல் சம்பவங்கள் நாட்டின் ஒழுங்கு கட்டுப்பாட்டு நிலைமைகள் எங் ஙனம் சீரழிந்து போயுள்ளன என்பதை வெளிப் படுத்தியுள்ளது.

றுகுணு பல்கலைக்கழகத் துணை வேந்தரை மாணவர்கள் சிலர் தாக்கியுள்ளனர் எனில், "கற் றோர்க்கு சென்ற இடம் எங்கும் சிறப்பு" என்பது எங்ஙனம் சாத்தியமாகும்?

ஆக, கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றது சாத்தியமாக வேண்டுமாயின் அந்த நாட்டில் அறம் நிறுவு ஆட்சி நடக்க வேண்டும்.

கொடுமரணம் இல்லா வாழ்வு அங்கு நிலை பெறவேண்டும். நாட்டில் ஜனநாயகப் பண்புகள் இழந்துபோகும் போது அங்கு அமைதியின்மை யும் அடாவடித்தனமும் தலைவிரித்தாடும்.

அதிலும் மாணவரிடையே குழப்பங்கள் ஏற்ப டும். பல்கலைக்கழகங்கள் இழுத்து மூடப்படும். ஐந்தாறு ஆண்டுகளில் எங்கும் கலகம், எங்கும் பரபரப்பு, எங்கும் அமைதியின்மை என்ற கள நிலை உருவாகும். இந்நிலைமையையே நாட் டில் காண்கிறோம்.

இத்தகைய சம்பவங்கள் இலங்கையின் எதிர் கால ஆரோக்கியத்துக்கு உகந்ததன்று. இலவசக் கல்வி, இலவசப் பாடநூல், இலவச சீருடை என எல்லாமும் இலவசமாக இருக்கும் போது,

கல்வியின் முடிபு எவ்வாறாக அமையவேண் டும் என்ற நோக்கம் நிறைவேறியுள்ளதா? என் பதை சிந்தித்துப் பார்த்தால் வெறுங்கை விரித் தல் மட்டுமே மிஞ்சும்.

அப்படியானால் எங்கோ தவறு இருக்கிறது. அந் தத் தவறு நீண்ட காலமாக அமுலாகிக் கொண்டு வருகின்றது. அந்த தவறு எதுவென இந்தத் தேசத் தில் ஆட்சியைத் தீர்மானிக்கும் மக்கள் என்றோ ஒருநாள் சிந்திக்க வேண்டிவரும்.

அந்தச் சிந்தனையின் முடிபு தமிழ் மக்களை நசுக்கியமை, அவர்களின் உரிமைக்கு மதிப்புக் கொடுக்காமை, தமிழர்கள் கொல்லப்படுவதை நியாயப்படுத்தியமை, அவர்களை மிகக் கொடூர மாக சித்திரவதை செய்தமை இவை அனைத்தும் தான் என்பதாக இருக்கும்.

ஒழுக்கம் என்பதும் அறம் என்பதும் அகிம்சை என்பதும் இன வேறுபாடு சார்ந்த விடயங்கள் அன்று.

அறத்தின்பால் மாணவர்களை வழிப்படுத் துவது என்பது, அரசின் நடவடிக்கைகளோடு தொடர்புபட்டது.

ஒரு இனத்தை அடக்கிக் கொண்டு இன்னொரு இனம் தன்னை பெருமைப் படுத்த முடியாது. உலக நாடுகளின் வரலாற்றை எடுத்து நோக்கும் போது, எந்த நாடு ஜனநாயகப் பண்புகளில்- சமத்துவத்தைப் பேணுவதில்- மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் உயர்ந்து நிற்கின்றதோ அந்த நாட்டில் இன, மத, மொழி என்ற பாகுபாட் டிற்கு இம்மியும் இடமிருக்காது.

அங்கு "மனிதம்" என்பது மட்டுமே கருத்திற் கொள்ளப்படும்.

இந்தநிலை என்று இந்த மண்ணில் ஏற்படு கிறதோ அன்றுதான் கற்றவர்களுக்கு சிறப்பு என் பது சாத்தியமாகும்.

இல்லாதவரை கற்றவர்களே அதிகம் பாதிக் கப்படுவர்.

## கலை விருந்து

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத் தின் அனுசரணையுடன் யாழ் .கோண்டாவில் சிவ பூமி, சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவ, மாணவிகள் வழங் கும் கலை விருந்து நிகழ்வு இன்று வெள் ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். (ஸ்ரீ-2)

## பல்கலைக்கழக மாணவர்களை நடுவீதியில் மண்டியிட வைப்பேன்

### பிரதியமைச்சர் மேர்வின் எச்சரிக்கை

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழக மாணவர்க ளின் எதிர்ப்புச் செயற்பாடுகளை தன் னால் இனியும் பொறுத்துக்கொள்ள முடி யாது என்றும் எதிர்ப்புப் போராட்டங்க ளில் ஈடுபடும் மாணவர்களை பல்லாயி ரக்கணக்கானோர் பார்த்துக்கொண்டி ருக்க நடுவீதியில் மண்டியிடவைப்பேன் என்றும் பிரதியமைச்சர் மேர்வின் சில் வா எச்சரித்துள்ளார்.

களனிக் தொகுதியின் பாடசாலைகளைக் கண்காணிக்கும் நோக்கில் நேற்று சுற்றுப் பயணம் மேற்கொண்ட பின் கருத்துத் தெரி விக்கும் போதே பிரதியமைச்சர் மேர் வின் இவ்வாறு எச்சரிக் கை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள் வதை மட்டுந்தான் சிந்திக்கவேண்டும். அதை விடுத்து எதிர்ப்புப் போராட்டங்கள் அது, இது என்று இறங்கினால் நடுவீதியில் நாய்களைப் போல மண்டியிடவைத்து கடுமையாகத் தண்டிப்பேன் என்றும் எச்சரித்தார்.

இதற்கிடையே நேற்று முன்தினம் களனிப் பல்கலைக்கழக மாணவர்களுக் கெதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சிகளில் களனிப் பிரதேசத்தின் பிர சித்தி பெற்ற விலை மாதர்கள் மற்றும் கிரி பத்கொடையின் பிரபல குண்டர் குழுக்கள் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.(சு-5)


## தனியார் பல்கலைக்கழகங்களுக்கு கொள்கை ரீதியில் எதிர்ப்பில்லை

### ஜே.வி.பி அறிவிப்பு

தனியார் பல்கலைக்கழகங்களை ஜே.வி.பி. கொள்கை ரீதியில் எதிர்க்கவில்லை என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவுவதற்கு அரசாங் கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் காரணமாகவே தனியார் பல் கலைக்கழகங்களை எதிர்ப்பதற்கு ஜே.வி.பி .யைத் தூண்டியது என வும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறந்த விரிவுரையாளர்கள் அரசாங்க பல்கலைக்க ழகங்களை புறக்கணித்து விட்டு தனியார் பல்கலைக்கழ கங்களில் இணை வதற்கு வழிவக்கும் வகையிலேயே இதுவரை அரசாங்கத்தின் நட வடிக்கைகள் அமைந்திருந் தன. அதனாலேயே தனியார் பல் கலைக்கழகங்களை அமைக்கும் முயற்சிகளை ஜே.வி.பி. எதிர்க் கிறது என அவர் கூறினார். (ஸ்ரீ-2)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# கல்வி விரதம்

குழந்தைகளின் கல்வி அபிவிருத்திக்காகப் பெற்ற வர்கள் அனுஷ்டிக்க வேண்டிய விரதமே கல்வி விரதம் எனப்படும். புதவார விரதமாகும். அன்று அதிகாலை நீராடி, பச்சை வண்ண ஆடை உடுத்தி, மாலையில் பெருமாள் கோயிலுக்குச் சென்று வணங்க வேண்டும். பின்னர் சிவாலயத்திலுள்ள நவக்கிரக மண்டபத்தில் புதனுக்கு அர்ச்சனை செய்து வழிபட வேண்டும். இதை கால வரம்பின்றி தொடர்ந்து செய்யலாம். மாணவ மாணவிகளும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம். கல்வி அபிவிருத்தி, இசை ஞானம் ஆகியவற்றுக்காக இது மேற்கொள்ளப்படும்.

# வெள்ளி நற்சிந்தனை 146

## பக்தியின் மொழி தமிழ்

சமயம் ஒரு வாழ்வியலாக இருப்பதால் அந்த வாழ் வியலின் நாளாந்த நடைமுறைகள் மனிதனைப் பண்படுத்து வனவாக உள்ளன. சைவ சமயம் திருக்கோயிலை ஒரு பயிற்சிக் களமாகக் கொண்டது. அப்பயிற்சியில் சில சைவ சமயத்தவர்களை அடையாளம் காட்டும் நடைமுறைகளாக அமைந்துள்ளன. 'வெந்தநீறு அருங்கலம்' என்று நாவுக் கரசர் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். வெந்தநீறு வெண்ணீறு எனவும் விபூதி எனவும் அழைக்கப்படுகிறது. இறைவனும் திருமேனியில் வெண்ணீறு அணிந்திருப்பதாக நாவுக்கரசர் பாடியுள்ளார். 'பவளம் போல மேனியில் பால் வெண்ணீறு' என்று குறிப்பிட்டுள்ளார். இறைவனுடைய பவளம் போன்ற திருமேனியில் பால் போன்ற வெண்ணீறு கவின் நிறைந்த தாகத் தோற்றுகிறது.

சம்பந்தர் பாடல்களில் நீறு என்று சிறப்பாகப் பேசப் பட்டுள்ளது. நோயைத்தீர்க்கும் மருந்தாகச் சம்பந்தர் நீற்றைக் குறிப்பிடுகின்றார். ஆனால் அப்பர் வெண்ணீற்றை விரதி களுக்கு அருங்கலம் எனக் கூறியுள்ளார். விரதிகள் என்பது சைவசமயத்தவர்களின் சிறப்பான வழிபாட்டு நடைமுறை களாகும். இந்நடைமுறையில் மனிதரின் உணவுப் பழக்கங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. மனம் பொறி வழிச்செல்வதற்கு நா முக்கிய காரணமாகும். எனவே நாவடக்கம் பேணுவதற் காக உணவைக்கட்டுப்படுத்தும் பயிற்சி ஒன்று வழிபாட்டு நடைமுறையுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் விரதம் பற்றிய கருத்துண்டு. அதற்கு உரை எழுதிய பரி மேலழகர் விரதமாவது மனம் பொறிவழிகளில் செல்லா திருக்கும் பொருட்டு உணவைச் சுருக்கியேனும் விடுத்தேனும் இருப்பது என விளக்கம் கூறியுள்ளார்.

எனவே அப்பர் கூறும் விரதிகள் வெண்ணீறு அணிவ தால் அவர்களுக்கு அது பெருஞ்சிறப்பைத் தருவது என்று கூறுவது அவர்கள் சமய வாழ்வியலில் ஈடுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இதேபோன்று அந்தணர்களுக்கு அரு மறையான ஆறங்கமே அரிய சிறப்பைத் தருவது. இறை வன் திருமுடியிலே திகழும் திங்களுக்கு நீண்ட சடாமுடி சிறப் பைத் தருகிறது. இறைவன் திருக்கோலத்திலே திங்கள் தனித் துவமானது. வழிபடும் அடியார்களாகிய மக்களுக்கு அரிய சிறப்பாக இருப்பது நமச்சிவாயவே.

வெண்ணீறு அணிவது தோற்றத்தைச் சிறப்பாகக் காட்டும். அந்தணர் ஆறங்கமான வேதம் ஓதுவதால் சிறப் புப் பெறுவர். சாதாரண பொதுமக்களுக்கு நமச்சிவாய என்று ஒலிப்பதே பெருஞ்சிறப்பைத்தரும். வழிபாட்டு நடைமு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

றைகளை தமக்குரிய சிறப்புடன் விளங்குவதை அப்பர் பாட லொன்று சிறப்பாகத் தொகுத்துக் காட்டியுள்ளது. வெண்ணீறணிந்தவர்களைக் கண்டவர் அவர்களை உடனே அடையாளம் காண்பர். இறைவனுடைய திருமுடியிலே விளங்கும் திங்களையும் வணங்குவர். உருவ வணக்கம் விரதிகளுக்கு இன்றியமை யாதது என்ற கருத்தை இப்பாடலில் அப்பர் விளக்கியுள்ளார்.

வெந்த நீறருங் கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழும் நீண்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே

# கரவெட்டி பிரதேசசபை பிரிவிலுள்ள வீடுகளுக்கு வீட்டு இலக்கங்கள்

கரவெட்டி பிரதேச சபை பிரிவில் உள்ள நெல்லியடி உப அலுவலகத்திற்குட்பட்ட மக்களின் வீடுகளுக்கு வீட்டு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதே சபை செயலர் கே.குல்நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஒரு மாத காலமாக எமது பிரிவில் சொந்த வீடு மற்றும் வாடகை வீடுகளில் வசித்து வருகின்ற மக்களின் நலன் கருதி அவர்களுக்கு வீட்டு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் அவர்களின் வீடுகளை உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவர்களுக்கு தேவையான நபர்கள் இலகுவாக இனங் காணமுடியும்.

எனவே வீட்டுக்குமுன் தெளிவான முறையில் வீட்டு இலக்கங்களையிடுமாறு வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-24)

# சாரதிகள் தூங்காமல் தடுக்கும் கருவி ஜெர்மன் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

கார் ஓட்டும் போது சாரதி தூங்கிவிட்டால், உடனடியாக சத்தம் கொடுத்து எழுப்பும் சிறு கருவியை ஜெர்மன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஜெர்மனியில் இல்மெனா என்ற இடத்தில் உள்ளது டிஜிட்டல் மீடியா டெக்னாலஜிக்கான பிரான்ஹோபர் நிறுவனம். இந் நிறுவன விஞ்ஞானிகள் தான் இக் கருவியைக் கண்டுபிடித்துள்ளனர். "ஐ டிரேக்கர்" எனப்படும் இக்கருவியை காரினுள் எந்தப் பகுதியிலும் பொருத்திக்கொள்ளலாம்.

இக்கருவிக்குள் பொருத்தப்பட்டிருக்கும் கமரா சாரதியின் கண் அசைவுகளை நோட்டமிட்டுக்கொண்டே இருக்கும். சாரதி சற்று அசந்தாலும் கருவி பலத்த சத்தம் ஏற்படுத்தி எழுப்பிவிடும். இதற்கு கம்ப்யூட்டர் அல்லது லப்டொப் தேவையில்லை. சாரதியின் தலை இடது, வலது என எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒரு நிமிடத்துக்கு 200 பிரதிபலிப்புக்களை கமரா வெளிப்படுத்தும். வேண்டுமானால் கமராவில் இருந்து காரில் இருக்கும் சிறிய கம்ப்யூட்டருக்கு இணைப்புக் கொடுத்துக்கொள்ளலாம்.

இக்கருவி தீப்பெட்டி அளவில் அரைவாசியாக இருக்கும். காரினுள் பொருத்தினால் கூடத் தெரியாது. அந்த அளவுக்கு சிறிய கருவி. இதில் இருக்கும் லென்ஸ் 4 மி.மீ. விட்டம் கொண்டது. கண்பார்வை குறைபாடுகளைக் கண்டறியும் வகையில் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விஞ்ஞானி பீட்டர் ஹுசர் கூறுகையில், காரில் மூன்று மாதங்கள் இக் கருவி பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்படும். அடுத்த ஆண்டில் கார் உற்பத்தியாளர்களுக்கு விற்கப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# திருமலை மாவட்ட இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கு ரூ.231 இலட்சம் நிதியுதவி

திருமலை மாவட்ட இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கு பிரதமர் டி.எம். ஜயரட்ன 231 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

தமது திருகோணமலை விஜயத்தின் போதே பிரதமர் இந்த நிதிக்கான காசோலையை வழங்கியுள்ளார்.

இந்நிதியை மாவட்டத்திலுள்ள 231 ஆலயங்களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா என்ற வீதத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதியமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், திருமலை அரச அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# பரிசளிப்பு விழாவும் கலை விழாவும்

திக்கம் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திக்கம் மத்திய சனசமுக தலைவர் கு.தினேஸ் தலைமையில் திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் பட்டிமன்றப் பிரிவு வழங்கும் சொல்வேந்தர் பொன் சுகந்தனின் தலைமையிலான சிறப்புப்பட்டிமன்றமும் அதனைத் தொடர்ந்து பொன். சுகந்தனின் சக்தி வில்லிசைக் குழுவினர் வழங்கும் சீதா கல்யாணம் என்னும் விடயம் பற்றிய சிறப்பு வில்லிசையும் இடம்பெறும். (ஸ்ரீ)

# கருத்தரங்கு

(மருதங்கேணி)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பருத்தித்துறை பிரதேசசபையினால் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு புலோலி பொதுநூலக மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேசச்சபை செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற பிரதேச செயலர் எஸ்.வீரபத்திரபிள்ளை கருத்துரை வழங்கவுள்ளார்.

அத்துடன் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-35)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

என்.டி.பி.அவிவா காப்புறுதி நிறுவனத்தினால் வலிகாமம் கோட்டத்தில் உள்ள 100 ஆசிரியர்களுக்கு "மாணவர் களின் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்திசெய்தல்" என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை யாழ். பொதுநூலக மண்டபத்தில் நிறுவன யாழ். பிராந்திய முகாமையாளர் கே. செல்வராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் "கல்வி முன்னேற்றத் திட்டம் கல்வி மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்" என்ற தலைப்பில் கலாநிதி.க.கு.குகதாசன் வளவாளராக கலந்துகொண்டு உரையாற்றவுள்ளதாக என்.டி.பி.அவிவா காப்புறுதி நிறுவனத்தின் தொடர்பாளர் உசேன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## கேள்வி அறிவித்தல்-2011

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சி கடைகளினை 2011ஆம் ஆண்டிற்கு (01.01.2011-31.12.2011) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 29.10.2010-09.11.2010 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 09.11.2010 பி.ப.1.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 09.11.2010.பி.ப 2.00 மணி

(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "செயலாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் எதிர்வரும் 09.11.2010 நண்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 1 | அச்சுவேலி பொதுச் சந்தை | | | |
| | துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட | 500.00 | 2000.00 | 2,000,000.00 |
| 2 | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 167,000.00 |
| 3 | அச்சுவேலி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 22,000.00 |
| 4 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 38,000.00 |
| 5 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 250.00 | 500.00 | 31,000.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 1 | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 67,000.00 |
| 2 | புத்தூர் பொதுச்சந்தை | 250.00 | 500.00 | 105,000.00 |
| 3 | புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 7,250.00 |
| 4 | ஆவரங்கால் பொதுச்சந்தை | 250.00 | 250.00 | 16,500.00 |
| | **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 1 | நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 34,000.00 |
| 2 | நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 9,500.00 |
| 3 | நீர்வேலி பொதுச்சந்தை | 250.00 | 250.00 | 8,500.00 |
| 4 | நீர்வேலி மீன் சந்தை | 250.00 | 250.00 | 4,750.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 1 | கோப்பாய் வடக்கு பொதுச்சந்தை | 200.000 | 500.00 | 14,250.00 |
| 2 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 71,250.00 |
| 3 | கோப்பய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 250.00 | 2,850.00 |
| 4 | இருபாலை சந்தி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 124,000.00 |
| 5 | இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 250.00 | 4,000.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 1 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 94,000.00 |
| 2 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 61,000.00 |
| 3 | உரும்பிராய் மத்தியசந்தை | 500.00 | 2000.00 | 33,250.00 |
| 4 | ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 50,000.00 |

01. சந்தையிலிருந்து 01 கி.மீ. சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் உப அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்பத்திரப் பணம், சித்திபெற்ற கேள்வித்தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும்போது உள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.
04. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப்படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப் படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

வலி கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
29.10.2010

தம்பையா நடராசா
செயலாளர்.

(சீ/1499)

# கொச்சி அணிக்கு 30 நாள் கெடு இந்தியக் கிரிக்கெட் சபை அறிவிப்பு

உரிமையாளர் பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் கொச்சி அணிக்கு, 30 நாள் கெடு விதிக்கப்பட்டுள்ளது. இதற்குள் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால், அணியின் உரிமை ரத்து செய்யப்படும் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) எச்சரித்துள்ளது.

கடந்த 2008ம் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) சார்பில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஐ.பி.எல் இருபது-20போட்டிகள்ஆண்டுதோறும் வெற்றிகரமாக நடந்து வருகிறது. இதில் மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், டில்லி டேர்டேவில்ஸ் உள்ளிட்ட 8 அணிகள் இது வரை பங்கேற்றன. அடுத்த ஆண்டு கொச்சி மற்றும் புனே அணிகளை சேர்த்து மொத்தம் 10 அணிகள் பங்கேற்க விருந்தன.

**கொச்சி அணி சர்ச்சை**

இந்நிலையில், உரிமையாளர்கள் குறித்து சரியான தகவலை தெரிவிக்காத ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிகளின் உரிமையை இந்திய கிரிக்கெட் சபை கடந்த 10ம் திகதி அதிரடியாக ரத்து செய்தது.

தவிர, புதிதாக இணைக்கப்பட்ட கொச்சி அணிக்கும், முறையான தகவல்களை தெரிவிக்குமாறு காலக்கெடு விதித்தது. கொச்சி அணியை ரெண்டஸ்வஸ் நிறுவனம் ஆயிரத்து 530 கோடிக்கு வாங்கியது. இந்த அணியின் பங்குகள் குறித்து ஆரம்பத்திலிருந்து பிரச்சினை இருந்து வந்தது. இந்நிலையில் கொச்சி அணியில் நிலவும் பிரச்சினைகளை தீர்க்க, முன்னாள் இந்திய அணித் தலைவர் கவாஸ்கர் உதவ உள்ளதாக செய்திகள் வெளியாயின. இதனை கவாஸ்கர் மறுத்தார்

இது குறித்து இதன் தலைவர் சஷாங்க் மனோகர் கூறியதாவது,

கொச்சி அணியில் நிலவும், உரிமையாளர் பிரச்சினையை தீர்க்க, 30 நாட்கள் அவகாசம் அளித்துள்ளோம். அதற்குள் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்காவிட்டால், 31வது நாளில் கொக்சி அணியின் உரிமை அதிரடியாக ரத்து செய்யப்படும். ராஜஸ்தான்றோயல்ஸ் மற்றும் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிகளின் பிரச்சினை வேறு கொச்சி அணியின் பிரச்சினை வேறு. கோச்சி அணியில் நிலவும் பிரச்சினை, எளிதின்சரிசெய்யக் கூடியது தான், இதனால் அவகாசம் அளித்துள்ளோம். கொச்சி அணிக்கும், கவாஸ்கருக்கும் உள்ள தொடர்பு அவர்கள் இருவருக்கும் தான் தெரியும் பி.சி.சி.ஐ க்கு தெரியாது இவ்வாறு மனோகர் தெரிவித்தார்.

**கொச்சி அணி மகிழ்ச்சி**

இது குறித்து கொச்சி அணியின் உரிமையாளர்களில் ஒருவரான சத்யஜித் கெய்க்வாட் கூறுகையில்.

பி.சி.சி.ஐ, எங்களுக்கு நிறைய அவகாசம் அளித்துள்ளது. இதனால் கொச்சி அணியின் பங்குதாரர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதற்கு ஐ.பி.எல் நிர்வாகக் குழு தலைவர் சஷாங்க் மனேகருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் எங்கள் அணியின் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவோம் அடுத்த ஆண்டு நடக்கும் ஐ.பி.எல் தொடரில் கொச்சி அணி கட்டாயம் பங்கேற்கும் என்றார்.

## 50 இலட்சம் ரூபாய் பண மோசடி

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலுள்ள கணவனிடம் அனுப்புவதாகத் தெரிவித்து 50 இலட்சம் ரூபாய் பணத்தை பெண் ஒருவரிடம் பெற்று அப்பணத்தை தனது பெயரில் காப்புறுதி செய்த நபர் தொடர்பில் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் இப் பண மோசடியைத் செய்துள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பண மோசடி தொடர்பில் உரிய தரப்பினரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (எ)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை திக்கம் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நிலையத் தலைவர் கு.தினேஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ச-63)

# இருபது- 20 தொடர் தென்னாபிரிக்கா வசம் பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து தோல்வி

(அபுதாபி)

திரோனின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் இரண்டாவது 'இருபது - 20' போட்டியில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் மோதும் 2 'இருபது - 20', 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் அபுதாபியில் நடைபெறுகின்றது.

இதில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற முதலாவது 'இருபது-20' போட்டியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில்முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவதும் இறுதியுமானஇருபது-20 போட்டிநேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 120 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மிஸ்பா உல் ஹக் 38 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 33 ஓட்டங்களையும் அப்துல் ரஷாக் 25, ஹைடர் 17, ஹபீஸ் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திரோன் 4 விக்கெட்டுக்களையும் ரிசொற்கோபி 2 விக்கெட்டுக்களையும் அல்பி மோர்கல், மோனி மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 121 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 18.4 ஓவர்களில்

4 விக்கெட்டுக்களையிழந்து 125 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் சிமித் 42 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களையும் இவ்ராம் 17 பந்துகளில் (4 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸ்சர் உட்பட) 31 ஓட்டங்களையும் டுமினி ஆட்டமிழக்காமல் 16 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அக்தர், ஹபீஸ், அப்ரிடி, அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு வழிசமைத்த திரோன் ஆட்ட நாயகனாகத் தெரிவானதுடன் ஜெகன் போத்தா தொடர் நாயகன் விருதை வென்றார்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரை 2:0 என்ற கணக்கில் சுவீகரித்தது.

## போரினால்...

உடன்படிக்கை குறித்து அவர் கூறுகையில்,

ஆசிய கலாசார மற்றும் நாகரிகம் நோர்வே நாட்டினர் புரிந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு சிங்கள மற்றும் தமிழர்களின் மனப்பாங்கும் புரியவில்லை.

போர்நிறுத்த உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் குறிப்பாக நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹேய்ம் போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

அவர்தான் பிரதான குற்றவாளி. அவரை இலங்கை அரசாங்கம் வரவேற்கப்படாத ஒருவராக நோக்க வேண்டும் எனக் கூறிய கோமின்தயா சிறி, சொல்ஹெய்ம் புலிகளின் நண்பராக இருப்பதாக குற்றம் இருந்ததாகவும் கூறியுள்ளார். (ச-5)

## பிரதிவாதி...

ருக்கலாம் என்று நீதிமன்றம் கருதுகின்ற காரணத்தால் அவர் தொடுத்துள்ள மனு மீதான விசாரணையை ஏற்பதற்கு தீர்மானித்துள்ளது.

ஆயினும் இராணுவ நீதிமன்றம் நாட்டின் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதா மற்றும் சரத் பொன்சேகாவின் வழக்கு முடியும் வரை அவரது நாடாளுமன்ற உறுப் பினர் பதவி பறிக்கப்படக் கூடாது என்ற தடை உத்தரவு கோரிக்கை என்பன தொடர்பில் நீதிமன்றம் என்னமும் ஒரு முடிபுக்கு வரவில்லை.

அது தொடர்பாக பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன. (ச-5)

## இலங்கைக்கு ஆயுதங்க...

நோர்வே அமெரிக்காவுக்கு ஏராளமான ஆயதங்களை விநியோகித்து உள்ளது. நோர்வேயின் ஆயுதங்களின் உதவியுடன் ஈராக்குடனான அமெரிக்காவின் யுத்தத்தில் 200 ஈராக்கியர்கள் குறைந்தது கொல்லப்பட்டிருக்கிறார்கள் என இம் மனிதாபிமான அமைப்பின் செயலாளர் அற்லி சொமர்பில்ட் மேற்படி அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

அமெரிக்க இராணுவத்தினர்தான் நோர்வேயின் அதிகளவிலான வாடிக்கையாளர் என்று தெரிவித்துள்ள அவர், இலங்கை சூடான், கொங்கோ ஆகிய நாடுகளுக்கும் நோர்வே ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது என்றும் கூறினார்.

நோர்வே ஆயுத விற்பனை மூலமாக பெரும் தொகை பணத்தை உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் சம்பாதிக்கின்றது .என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## மோட்டார் சைக்கிள் திருட்டு, குற்றவாளி அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவம் தொடர்பில் குற்றவாளி இனங்காணப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் கடை ஒன்றின் முன்னால் விட்டுச் சென்றபின்னர் திரும்பி வந்து பார்த்தபோது அது காணாமல் போயிருந்தது.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டு மூவர்சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.இவர்கள் மூவரும் கடந்த 27 ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்பட்ட போது ஒருவர் இனங்காணப்பட்டார்.சந்தேகநபரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் எ.ஆனந்தராசா மற்றைய இருவரையும் தலா 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 2 ஆட்பிணையிலும் 25 ஆயிரம் ரூபாய் காசுப்பிணையிலும் விடுதலைசெய்தார். (எ)

## நல்லிணக்க...

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அனைத்து பிரஜை களினதும் மொழி உரிமைகளை உறுதிப்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சரவை பேச்சாளர், தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் போது தெரிவித்தார். (ச-5)

## முஸ்லிம் காங்கிரஸ்...

குறிப்பிட்டார்.

கட்சியின் பெயர் மாற்றப்படு வதன் மூலம் எதிர்காலத்தில் கட்சியின் அடிமட்டம் முதல் அதியுயர் பீட உறுப்பினர்களாக ஏனைய இன மக்களையும் எமது கட்சியில் உள்வாங்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் கூறினார்.

கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரிசாட் பதியுதீனை தலைவராகக் கொண்ட அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அத்துடன் கிழக்கு மாகாண சபை யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் வவுனியா நகர சபை ஆகிய வற்றில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். (ச-5)

# வடக்கு மாகாண சபை...

திணைக்களங்கள் என்பன தற்போது திருகோணமலை வரோதயா நகரிலுள்ள கட்டிடத் தொகுதியில் நடைபெற்று வருகிறது.

இந் நிலையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு அலுவலகங்களும் அதற்குட்பட்ட திணைக்களங்களின் அலுவலகங்களும் கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ளன.

**கல்வி அமைச்சு மருதனார்மடத்தில்**

அத்துடன் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, அதற்குட்பட்ட திணைக்களங்களின் அலுவலகங்கள் மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் மேல் தளங்களில் அமைக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி, சமூக சேவைகள், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் சிறுவர் நன்நடத்தை அமைச்சு, அதற்குட்பட்ட திணைக்களங்களின் அலுவலகங்கள் கைதடியிலும் அமைக்கப்படுகின்றது.

இந் நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலகம், பிரதம செயலாளரின் செயலகம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு அலுவலகம் என்பன யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான இடங்களைத் தெரிவு செய்வதற்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் தலைமையில் விஷேட குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர். (ச-5)

# ஜனாதிபதி...

யுள்ளது.

எதிர்வரும் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது தவணைக்காலத்தை ஆரம்பிக்கும்போது சீனாவின் ஆதரவுடன் அமைக்கப்படும் அம்பாந்தோட்டை துறைமுகத்தினுள் கப்பல்களை அனுமதிக்கும் விழாவை கொண்டாட இலங்கையும் சீனாவும் தயாராகி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கொழும்பு...

டன் தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்குமிடையிலான கப்பல் சேவையும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கப்பல் சேவை ஏற்கனவே 2003, 2004ஆம் ஆண்டுகளில் திட்டமிட்டிருந்தபோதும் பாதுகாப்பு காரணமாக அத்திட்டம் இடை நிறுத்தப்பட்டது. (ச-5)


## SPECIAL ENGLISH

- சகலருக்கும் உரியது
- சகல மொழித் திறன்களையும் கொண்டது
- மொழியினை பூரணமாக கற்க விரும்புவேருக்கு ஏற்றது.

வார இறுதி நாட்களில் நடைபெறுகின்றது.

ஆசிரியர்: த.ந.பஞ்சாட்சரம்

விபரங்களுக்கு: Director, New Science Hall, Kannathiddy.


# இலங்கை அகதி...

வின் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அண்மையில் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் மேற்கொண்ட கனேடிய குடிவரவுத்துறை அமைச்சர் ஜேசன்கெனி இலங்கை அகதிகளின் வருகை தொடர்பில் ஆலோசனை பெற்றுச் சென்றார்.

பின்னர் கிழக்குத் தீமோருக்கான விஜயம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் பிரவுன் மாற்று பிராந்திய முகாமை அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்த அறிக்கைகளின்படி எதிர்வரும் 2011 ஆம் ஆண்டளவில் பிராந்திய கூட்டு முகாம் ஒன்றை அமைப்பது தொடர்பிலான நடவடிக்கைகளுக்காக உயர்மட்ட நடவடிக்கை குழுவொன்றை உருவாக்க இணக்கம் காணப்பட்டதாகத் தெரிகிறது. (ச-5)


## காணவில்லை

NP MN 4574 இலக்கமுடைய மரூன் கலர் TVS Victor மோட்டார் சைக்கிள் பண்டத்தரிப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது காணாமல் போயுள்ளது. எனவே அதனை கண்டவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நா.செல்வநாயகம்
அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.
0779233081
(சி-1504)

## யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக!

25க்கும் அதிகமான தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதமான ஊடகக் கற்கைநெறிகள்

- கணனியுடன் ஊடகவியல்
- வானொலி ஊடகவியல்
- தொலைக்காட்சி ஊடகவியல்
- பத்திரிகை பக்க வடிவமைப்பு
- கிராஃபிக் டிசைனிங்
- ஃபோட்டோ கிராஃபி

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம், அச்சகம், ஸ்ருடியோ, போட்டோ, வீடியோ, அறிவிப்பாளர், விற்பனை ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல், விளம்பரத்துறை இன்னும் பல...

டென்மார்க்கில் பயிற்சி பெற்ற ஊடகவியலாளரினால் நடாத்தப்படுகிறது

Audio - Video Lab - Recording Studio

3 மாத கற்கைநெறி - 2 மாத பணியிடப் பயிற்சி

கற்கைநெறிகள் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் பற்றிய விளக்கக் கருத்தரங்கு
ஒக்டோபர் 31 ஞாயிறு காலை 10 மணி

சிகரம் ஊடக இல்லம்
இல.22, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 931
பதிவுகளுக்கு

## Register Now Computer Engineering

Pay per Module Rs.4800
was Rs.15000

- More career option
- Competitive salary
- Senior IT management position
- International job opportunities
- Msc admission from USA,UK universities

Schol. From States

Free (Course fees)
IELTS / TOEFL
ICDL BCS
CISCO-CCNA
A+ N+

MCS
Supported By UNDP/JRRP

SMS your name & course to 772 395 895 & Get Schol.

324,Palaly Road,Parameswara Junction

Closing Date 30.10.2010

## ஏல விற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 30.09.2009 வரை அடகு வைத்து 30.09.2010 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி:
13.11.2010 (சனிக்கிழமை)
காலை 8.30 மணி

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி<br>அஞ்சல் வங்கி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணக் கிளை,<br>இல.496 ,ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>T.P.:021 222 2696 |

ஏல விற்பனையை இரத்துச் செய்யும் /ஒத்தி வைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு -03

NSB

(சி-1501)

## January கற்கை துறைக்கான

European College of higher Studies

வழங்கும் மாபெரும் கட்டணக் குறைப்புடனான லண்டன் (UK) பயணம்

1) London Richmond College
2) Victoria College
3) Thames College of Technology
4) Interlink College
5) Bickenhall College
6) Union College ஆகியவற்றுடன் நேரடி முகவர்களாக செயற்படுகின்றோம். இன்னமும் (ஆரம்பத்தில் எவ்வித கட்டணமும் அறவிடமாட்டோம்)

Study in UK

- போலி வாக்குறுதிகள் இல்லை.
- IELTS அவசியமில்லை
- ஆரம்பக் கட்டணம் எதுவும் இல்லை.
- கல்லூரி கட்டணம் 2000 பவுண்ஸிலிருந்து
- Sponsor வசதி (25 லட்சம்-130000 /=)

Study in UK

நம்பிக்கை மிக்க பயணம்

(2765)

தொடர்புகளுக்கு:

European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,
Palaly Road,Jaffna.
Tel.No.: 0773537378,0773823872,0213734747





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.